mukadu.editer@gmail.com

# முகடு

mukadu

பங்குனி-சித்திரை 2015

"தமிழ் எங்கள் உயிருக்கு மேல்"



இருமாத இலக்கிய இதழ்

ஓலை - 4



# எங்கே இசைப்பிரியா?

நெடுமாறன்

இன்றும் ஈழம் கேட்கிறாள்
எங்கள் இசைப்பிரியா.

நாளைய பொழுதில்
நல்லதொரு விடியலுக்காய், விடுதலைக்காய்
போராடிய நாங்கள் இன்று
புலம்பி நிற்கின்றோம்
புலரும் திசை தெரியாமல்.

புலவன் நிலவென
சொன்னானே நீயோ அதை
மாற்றி எழுதினாய்
புலி மகளாகி விரைந்தாய்
வீரத் திருமகளாய்
வீறுகொண்டு எழுந்தாய்.

கொற்றமுடன் என்
முற்றம் வாவென நெற்றியில்
திலகமிட்டு அனுப்பி வைத்தாளே
அந்த வீரத்தாய் விடுதலை
வேட்கையுடன் உனை
என்ன சொல்லிட தெரியல
உன் அம்மாவிற்கு

பெண்ணியம் பேசும்
மனங்கள் பேசியதா
உனக்காய் இந்த உலகினில்
ஏன் பேசவில்லை.
மனித உரிமை பேசுகின்ற
மன்றங்கள் எல்லாம்
மௌனம் காக்கின்றதே.

மனிதநேயம்
அறமும், தர்மமும்
என்றே அறிக்கையிடுகின்ற
ஐ.நா சபை
இன்று எங்கே
மீதி தமிழினமும்
செத்தொழிந்த பிறகு தான்
மீட்க வருவார்களோ.

மண்ணை இழந்தல்ல
உன்னை இழந்தே
துடிக்கின்றோம் நாமல்லவா
களத்தினில் கொடுத்தோம்
எத்தனை ஆயிரம் உறவுகளை
அத்தனை வலிகளையும்
மிஞ்சிய ஒரு வலியையே
அனுபவிக்கின்றோம் இன்று.
தாங்கவும் முடியவில்லை
தூங்கவும் முடியவில்லையே?

இறுதி நொடிப்பொழுது
எம் இதயத்தை பிழிகின்றது மரத்துப்போன
மரநாய்கள் செய்த
கோர வெறித்தனம் பார்த்து!

என் அக்கா
உனக்காய் என்ன செய்தோம்
முடியவில்லையே
ஈழத்து இசைப்பிரியாக்களுக்கு
முகவரியாகிப்
போய்விட்டாயே நீ இன்று.
வளர்த்த கோழியை
வறுத்திட கூசிடும் எம்
இனத்தவனை
வதைத்துப் பார்த்தியா ?

பார்த்திரு பகையே
மீண்டும் வரலாறு திரும்பும்
எம் பக்கமாய்
மறைந்த மர்மங்களெல்லாம்
விலகும் அப்போது
தெரியும்
ஆயுதங்களின் மௌனிப்பை,
அண்ணனின் அமைதியை
உதாசீனம் செய்தவர்களுக்கு
அதுவரை
அமைதியாய்
போராடு எம் இனமே!



ஒசே மார்த்தி
JOSE MARTI 1853 - 1895

ஏந்த ஒரு நாடு கல்வி, தொழில், சமுதாயம், கட்டமைப்பு ஆகிய அனைத்துத் துறைகளிலும் தன்னிறைவு பெறுகிறதோ அதுதான் உண்மையான சுதந்திரம்.



- மானமும் அறிவும் மனிதனுக்கு அழகு.
- பகுத்தறிவு என்பது மனிதனுக்கு உயிர்நாடி
- மூடநம்பிக்கையும் குருட்டுப் பழக்கமும் சமூகத்தின் முதல் பகைவன்.
- விதியை நம்பி மதியை இழக்காதே.
- மக்களின் ஒழுக்கத்தையும் மதியையும் கெடுப்பது மது.

தந்தை பெரியார்

# யாவும் கற்பனையல்ல

வண்ணன்

சிலதசாப்தங்களுக்கு முன்பொருநாளின் மத்தியான வேளையில் வெக்கையின் கோரத்தை தணிக்க குளிரா ஏதாவது குடிக்கலாம் என்டு

( அந்தநேரம் ஒரு கூல் பியர் 70,75 ரூபா போல) சைக்கிளை எடுத்துக்கொண்டு ஸ்ரான்லி வீதியால் போகும்போது ஆரோ என்னை விசிலடைத்து கூப்புட்டது போல ஒர் உணர்வு,அட ரண்டு பியர் அடிக்கலாம் என்டு சந்தோசத்தோட போகேக்கை ஒரு போத்திலுக்கு வேட்டைவைக்கப்போறவன் ஆரடாப்பா இவன் என்டு நினைச்சுக்கொண்டே சைக்கிளை சிலோ பண்ணினேன்.அப்பொழுது என்னை கடந்து போன ஒருவர் என்னிடம் " தம்பி உன்னை அந்த தியேட்டருக்குள்ள இருந்து கூப்புடுறாங்கள் என்றார்.1995 ல அப்புவோட கத்திக்குழறி வெங்கடேஃவரா கடையில பதினைஞ்சாயிரம் ரூபாவுக்கு புது லுமாலா சைக்கிள் எடுத்து அதை தேர் போல அலங்கரித்து பெருமையுடன் சுத்தித்திரிந்த போது "ரீதர் " தியேட்டரில் ஓடிய "சினைப்பர்" "உறங்காத கண்மணிகள்" பார்க்கப் போயிருந்தேன் அதன்பிறகு

பலகாலமாக அந்தப்பக்கம் போனதில்லை இன்டைக்கு எவனடாப்பா எனக்கும் சேர்த்து ரிக்கெற் எடுத்து வச்சுக்கொண்டு கூப்புடுறான், சரி ஓசிலதானே போகப்போறம் குளுகுளுப்பா ரண்டு பியரை இறக்கிப்போட்டு அந்த கதகதப்போட போய் ஒரு படத்தை பாத்தால் சோக்காத்தான் இருக்கும் என்று எனக்குள் முனுமுனுத்தபடியே அங்கு போனால், அடுக்கப்பட்டிருந்த மண்மூட்டை அரண் இடைவெளிக்கால் ஒரு தலை

வெளியே வந்து, "அண்ணை இந்த மத்தியான வெய்யிலுக்கை தனிய எங்கை போறியள்.." என்டு என்னை விசாரித்தது, நானும் இந்த முகத்தை எங்கயோ பாத்திருக்கிறேன் என்டு ஞாபகப்படுத்த முயல்கையில், "என்னண்ணை யோசிக்கிறீங்கள் என்னை தெரியாதோ என்று மீண்டும் ஒரு கேள்வி என்னை நோக்கி, அப்பொழுதுதான்

பிடரியில் அடித்தாற்போல் நினைவிற்கு வந்து" அட நீ அவவின்ர மோன் எல்ல இஞ்ச என்ன செய்யிறாய்? என்றேன்." ஓமண்ணை அம்மாவோட ஒரு சின்னப்பிரச்சினை அதால கோபத்தில வந்து இதில சேந்துட்டன், பரவாயில்லை இப்ப எனக்கு மாதம் பத்தாயிரம் ரூபா சம்பளத்தோட மூன்டு நேரம் நல்ல சாப்பாடும் கிடைக்குது" என்றான். பொடியனை பார்க்கும்போதே அவன் சொன்னது உண்மைதான் என்று தெரிந்தது முத்தல் நாம்பன் மாடு போல நன்கு விளைந்து இருந்தான்.கேக்க சந்தோசமாத்தான் இருக்கடாப்பா, உதென்ன

கையில துவக்கு உனக்கு சுடவும் தெரியுமோ என அப்பாவித்தனமாய் கேட்டேன். ஓமண்ணை மூன்டு மாதம் ட்ரெய்னிங் எடுத்தனான் இப்ப எனக்கு வடிவா சுடத்தெரியும், உனக்கு சுட்டுக்காட்ட வேணும் என்டால் கொஞ்சம் பின்னால தள்ளிநில் உன்னை சுடுறன் என்றான்.அட குறுக்கால போவானே நீ சுட்டுப்பழக நானா உனக்கு கிடைச்சன் என்டு ஐந்தும் கெட்டு அறிவும் கெட்டு உடம்புக்குள் உதறல் எடுக்க , சரியடாப்பா நான் ஒரு முக்கிய அலுவலா போறன் பிறகு சந்திப்போம் என்டு சொல்லி சைக்கிளை கொற இழுவையாய் இழுத்துக்கொண்டு வெளிக்கிட, சரியண்ணை, ஏதாவது உதவி வேணுமெண்டால் என்னட்ட வா என்றான். உன்னட்ட உதவிக்கு வந்தால் என்ர அப்புவும் ஆச்சியும் உதவியில்லாமல் நாளைக்கு நடுறோட்டில தான் நிக்கவேணும் என மனதுக்குள்ளே நினைத்தபடி வந்த காரியத்தையும் மறந்து வீட்டுக்கு சைக்கிளை மிதித்தேன்.பிறகு




அந்த றோட்டின் பெயரைக்கேட்டாலோ என்னவோ இயமன் எருமை வாகனத்தில் வந்து அந்த வீதியில் எனக்காகவே காவல் நிக்கிறது போல தோன்றும் அதனால் அந்தப்பாதையால் பயணிப்பதைக்கூட தவிர்த்துவிட்டேன்.

சிலகாலங்களின் பிறிதொரு நாளில் ஆச்சியின் ஆக்கினை தாங்காமல் பையை எடுத்துக்கொண்டு சந்தைப்பக்கம் ஏதாவது வாங்கலாம் என்று
போனால், மீண்டும் அதே குரல் என்னண்ணை சந்தைக்கு சாமன் வேண்ட வந்திருக்கிறியளோ என்றது, நிமிர்ந்து பார்த்தால் அவனேதான். என்னடாப்பா இன்டைக்கு உன்னை சந்தைக்குள்ள டியூடி பாக்க விட்டுட்டாங்களோ என்று கேட்டேன். இல்லையண்ணை, சும்மா பகிடி விடாதை நான் அதைவிட்டு விலகியே கனகாலமாச்சுது என்றான், நானும் ஆச்சரியத்துடன், ஏனடாப்பா அங்கினையும் ஆரோடயன் கொழுவல் எடுத்துப்போட்டு வெளிக்கிட்டுட்டியோ என்றேன். இல்லையண்ணை அதில இருக்கேக்க ஒரு பிள்ளைய பாத்து ரண்டு பேருக்கும் புடிச்சுப்போட்டுது பழகினோம்,ஆனால் அவள் இதை விட்டுட்டு வந்தால்தான் கட்டுவன் என்டு ஒற்றைக்காலில நின்டதால நானும் சரியென்டு விட்டுட்டு வந்து கலியாணம் கட்டிப்போட்டன், இப்ப மூன்டுவயதில ஒரு பொம்பிளைப்பிள்ளையும் இருக்கென்று கூறி சிரித்தபடியே தலையைச் சொறிந்தான்.அட நாசமாய் போனவனே உன்ர கொம்மா ஏதோ பேசிப்போட்டா என்டு வீட்டை விட்டுப்போனனி ஒரு பொம்பிளை சொல்லிப்போட்டாள் என்டு எல்லாத்தையும் விட்டுட்டு வந்திட்டாய்தானே? சரி சரி எப்படியோ குடும்பத்தை நல்லவிதமா பார் என்றபடியே அவன் கட்டுக் குள் அடுக்கி வைத்திருந்த முருக்கங்காய்களை ஆராயத்தொடங்கினேன். "என்னண்ணை பெரிசோட உனக்கு கனகாலமா தொடர்பு..." பெரிசா ரண்டு நல்ல காயாப்பாத்து மலிவாப் போடடாப்பா வெந்தையம் போட்டு வதக்கி நல்லா ஒரு குழம்பு வைப்பம் என்று கூறியபடியே அவன் கேட்டதை கேட்டும் கேளாததுமாய் முருக்கங்காய்களை வாங்கி பையினுள் போட்டவாறே புறப்பட்டேன் இன்டைக்கு முருக்கங்காய் கறி சாப்பிடப்போகிறேன் என்ற ஆசையுடன்.

---

## "ஹார்கிஸ்" இவர்கள் யார் என்று தெரியுமா?

அல்ஜீரிய
விடுதலை போரை
நசுக்குவதற்காக,
பிரெஞ்சு பேரினவாத
அரசு பயன்படுத்திய
துணைப் படையின்
பெயர் தான் ஹார்கிஸ்.
அல்ஜீரியாவில் அவர்களின்
பெயர் "ஒட்டுக் குழு!"





## காலம் சென்ற சமூகவிதடுலைப் போராளி இலக்கியவாதி

## கி.பி அரவிந்தன்

(1953-2015)

# திசைகள்

காலைச் சூரியனுக்கு
முகம் காட்டி நின்றால்
புறமுதுகில் மேற்கிருக்கும்.
இடக்கைப் பக்கம் வடக்கு
வாடைக்காற்று தழுவும்.
வலக்கைப் பக்கம் தெற்கு
சோழகம் பெயரும்.
வாடை, சோழகம்
கச்சான், கொண்டல் என்றே
திசைகள் உணர்த்தும்
காற்றின் பெயர்கள்.
அன்றைக்கு அம்மா சொல்லிடும்
எளிமையில்
திசைகள் துலக்கமாய் இருக்கும்.
இப்போதெல்லாம் திசைகள்
எனக்கு துலக்கமாயில்லை.
பெயர் சொல்லும்படியான
காற்றுகளும் ஏதுமில்லை
வீசுவது புயலெனத் தெரியும்
புயலுக்குண்டா திசை?
அதனிடை நான் இல்லாததால்
வெளியில் நின்றபடி
திசைகளைத் துலக்கும்
ஒரோர் தடவையும்
முயற்சியில் தோற்கிறேன்.
அவை தொலைந்திருக்குமோ?
ஏன் இந்த சந்தேகம்
வடக்கிருந்து புறப்பட்டவன் நான்
என் நினைவு சொல்கிறது.
தெற்கிருந்து வருகிறாய் நீ
குளிர் வலையத்தில்
எதிர்கொள்பவர் சொல்கின்றனர்.
எங்கிருந்து வந்தேன்
எத் திசையில் செல்கிறேன்?
என் விந்தணுவில் முளைத்தவையும்
குரலெழுப்புகின்றன
எத்திசையை முகங்கொள்வது?
எனக்குச் சொல்லித்தர
அம்மாவுக்கு இலகுவாயிருந்தது
என் குழந்தைகளுக்குச் சொல்லித்தர
எனக்கோ முடியவில்லை.
அம்மாவின் எளிமை எனக்கில்லை.
ஒரேயொரு தடவை
எழுவான் திசையை
யாரேனும் சுட்டுவீராயின்
சுடரும் விடியல் சூரியனுக்கு
முகம் காட்டி நிற்பேன்.
திசைகளைக் கண்டு கொள்வேன்.
குழந்தைகளுக்கும் அறிவிப்பேன்.

நன்றி
கி.பி அரவிந்தன்

தியாகாராஜா திபாகரன்.
ஊடகவியலாளர்.

**நெடுங்கேணி**

புளியங்குளம் முல்லைத்தீவுவீதியில் நெடுங்கேணிநகரப்ப குதியிலிருந்து ஒருமைல மேற்கில் பிரதான வீதியில் இருக்கின்ற கற்பாறையை ஒட்டியதாக ஐயனார் கோயில் ஒன்று இருக்கிறது. இக்கோயில் ஒரு கற்பாறையிலேயே அமைக்கப் பட்டிருக்கிறது. இவ் மலைப்பாறைத் தொடரில் ஆங்காங்கே காட்டினுள்ளே புராதன கட்டடச் சிதைவுகளைக் காணமுடியும்.கோயிலில் கற்புரம் கொழுதி துமிடத்தில் தட்டையான பெரும்பாறையில் பிராமி எழுத்துக்கள் மிகநீண்டதாகப் பொறிக்கப்பட்டிருக்கிறது. இக் கல் வெட்டுப் பற்றிய பதிவுகள் இன்றுவரை எங்கேயும் பதியப்படவுமில்லை, வாசிக்கப்படவுமில்லை ஆனால் அண்மையில் இக் கல் வெட்டின் ஒருபகுதி புகைப்படம எடுக்கப்பட்டு தொல்லியலாளர்களான திரு.பொ.ரகுபதி.திரு.ப. புஷ்பரட்ணம்ஆகியோருக்கு அனுப்பப்பட்டது. புகைப்படத்தில் கல்வெட்டின் இடைப்பகுதி மாத்திரமே பதிவாகியிருப்பதனால் அதனைவாசித்துப்பொருள் கொள்ளமுடியாதிருப்பதாகவும், முழுமையாகபடியெடுக்கப்பட்டாலே வாசித்துப் பொருள் கொள்ளமுடியும் எனவும் குறிப்பிட்டதோடு இக்கல்வெட்டின் எழுத்துவடிவங்கள் 2000ஆண்டுகள் பழமை வாய்ந்ததென குறிப்பிட்டிருந்தனர். இதுவரை இலங்கையில் கண்டுபிடிக்கப்பட்ட பிராமிக்கல்வெட்டுக்களில்அதுவே அமிகப் பழமையானதாக இருப்பதற்கான வாய்ப்புக்களே அதிகம். ஆகவேஇப்பகுதி முழுமையான ஆய்வுக்கு உட்படுத்துவதன் மூலம்மேலதிக ஆதாரப்படுத்தக்கூடிய தொல்லியற்தகவல்களை பெறமுடியும்

**மாங்குளம் (குஞ்சுக்குளம்)**

மாங்குளத்திலிருந்து வவுனியா நோக்கிசெல்லும் வீதியில மாங்குளத்திருந்து ஒன்றரை மைல் தூரத்தில்உள்ள குஞ்சுக்குளம் சந்தியிலிருந்து மேற்கு நோக்கி ஒரு வண்டிற்பாதை செல்கின்றது. அதன் வழியே சுமார் ஒருமைல் தூரம் காடுகளுக்கூடே சென்றால் அங்குமிகவும் வானளவு வளர்ந்த ஆலமரம் ஒன்றைத் துல்லியமாகக் காணமுடியும். அவ் ஆல மரச்சுற்றாடலிலும் அதற்கு அண்மையாகவும் பரவலாகக்கட்டட இடிபாடுகள், மட்பாண்டங்கள், கற்றூண்கள், கற்பாறைகளில் பாண்டி விளையாட்டிற்காகச் செதுக்கப்பட்டகுழிகள் போன்ற அமைப்புக்களும், சவ அடக்கங்களுக்கான அமைப்பு முறைகளும் காணப்படுகின்றது.



அத்தோடு அப்பகுதியில் புதையல் எடுப்பதற்காக தோண்டப் பட்ட குழியும்காணப்படுகின்றது. இப்பகுதிக்கு தொல்லியல் கில் யாரும் பார்த்ததாகவோ, தெரியப் படுத்தியதாகவோ இன்று வரை இல்லை. புதையல் தோண்டி

## பகுதி-3



யோரும் இதைப்பற்றி வெளியே தெரியப்படுத்தவில்லை. அவ்வாறானவர்கள் இன்று உயிருடனும் இல்லை. இவ்விடம் தற்செயலாக 1990காலப்பகுதியில் எனதுகண்பார்வையில்பட்டது. அதுபற்றி துல்லியமாக ஆராய்வதற்கு என்நண்பர்கள் எனக்குகால அவகாசம் அழிக்காவிடினும் என்மனப்பதிவுகளில் அவ்விடத்தை துல்லியமாக பதிவு செய்து கொண்டேன்.

இவ்விடம் பற்றிதற் செயலாககன கராயன்குளத்தைச் சேர்ந்த விஸ்வலிங்கம் அவர்களோடு அளவளா வியபோது அவ்விடத்தில் 1967 ஆம் ஆண்டு புதையல ்தோண்டியது தானும ்தன்னுடைய இரண்டு நண்பர்களும் எனக்குறிப்பிட்டதோடு கற்பாறைகள் அடுக்கி வைக்கப்பட்டிருந்த இடத்தை நான்கு அடி அளவு தோண்டிய போது இருண்டு விட்டதாகவும். விளக்குவெளிச்சத்தில் தோண்டும் பணியைத் தொடர்ந்த போது தோண்டும் கருவியான அலவாங்கு ஏதொ ஒரு உடைவு ஏற்பட்டு ஒரு பள்ளம்தெரிந்ததாகவும். அடுத்த கணமே பள்ளத்திலிருந்து வித்தியாசமான நாற்றம் வெளிப்பட்டதாகவும் நாற்றத்தினை உணருகின்ற போதே மூவரும் மயக்கமடைந்து நிலத்தில் விழுந்து விட்டதாகவும சுயநினைவுவந்தவுடன் மூவரும ்எழுந்து ஒரே ஓட்டமாக தலை தெறிக்க ஓடி காட்டைவிட்டு விட்டு வெளியேறியதாகவும் ஒரு விதமானபீதிகலந்த நினைவுப் பகிர்வினைச்செய்தார்.

அநேகமாக புதையல் எனத் தோண்டியது ஈமத்தாழிச்சவ அடக்கமாவே இருக்கவேண்டும். இவ்விடத்திற்கு இரண்டாவது முறைசெல்வதற் கான வாய்ப்பை காலம்எனக்களிக் கவில்லை. என்பதுதுரதிஸ்ரமானதே. இருப்பினும் 1998 யூன்மாதம் 28ஆம் திகதி மாங்குளம் பகுதியில் உடைந்தநிலையில் புத்தர்சிலையின் தலையும். தோள்ப்பகுதியும இலங்கை இராணுவத்தினர்கண்டெடுத்ததாக அரசவானொலிச ்செய்தி கூறிற்று.

அன்றைய நிலவரத்தின் படி இராணுவத்தினர ்வன்னி நோக்கி முன்னேறி இப்பிரதேசத்தையே முன்னரங்காகநிறுவி நிலைகொண்டிருந்தனர். இத்தொல்லியற் தளத்தினை இராணுவத்தினர் அவதானித்திருக்கக்கூடும். எனவேஇதனை பௌத்தமதத்துடன்தொடர்பு படுத்துவதற்கான முயற்சியாகவே இது கருதவேண்டியிருக்கிறது. இவ்விடம்பற்றியதகவல்கள்டே வறுளங்கிலும்.யாராலும் இதுவரை குறிப்பிடப்படவில்லை என்பது கவனிக்கப்படவேண்டிய விடயம் .

## அறிவோம்

**உலகத்திலேயே அதிக அதிகாரமுடைய ஜனாதிபதி – அமெரிக்க ஜனாதிபதி**

**கொம்யூனிஸ்டு கட்சி சட்டப்பூர்வமாக கொண்டு வரப்பட்ட ஆண்டு – 1944**

**அரசியலமைப்பின் தந்தை யார்– அரிஸ்டாட்டில்**

**சீனாவின் தலைநகர் – பீஜிங்**



# தமிழ் எங்கள் உயிருக்கு மேல்

ஒரு இனத்தின் அடையாளத்தை சிறப்புற வெளிப்படுத்துவதற்கு அவ்வினத்துக்குரியதான தாய் மொழியானது முக்கியத்துவம் பெற்று விளங்குகிறது. தாய் மொழியின் சிறப்புத் தன்மையை வைத்தே அவ்வினத்தின் மதிப்பை மட்டிடுவர். ஒரு மொழியின் தனித்துவம் என்பது அம் மொழி உலகில் வழங்கிவருகின்ற ஏனைய மொழிகளின் துணையின்றி குறிப்பாக பிறமொழிக் கலப்பின்றியும் காலமாற்றத்திற்கேற்ப அதன் தனித்தன்மையினின்றுவழுவாமல் விலகாமல் தனித்துவம் மாறாமல் இருந்தால் அம்மொழிக்கு இருக்கும் மதிப்போ தனி. அத்தகு தனிச்சிறப்பைத் தன்னகத்தே கொண்டு விளங்குவது எமது தாய்மொழியாகிய தமிழ் மொழியேயாகும். செம்மையும் செளுமையும் மிக்க மொழியாகிய தமிழ் மொழி கல் தோன்றி மண்தோன்றா காலத்து மூத்த மொழியாகும். இன்று பூகோளத்தின் பல்வேறு பிரதேசங்களிலும் எமது தமிழ் இனத்தவர்கள் பரந்துபட்டு வாழ்ந்து வருகிறார்கள். இக்காலகட்டத்தில் உலகத் தொன்மொழிகளுள் ஒன்றாக இன்றும் பொலிவு குன்றாமல் பீடு நிறைந்து விளங்கும் தமிழ் மொழியா-னது அதைப் பிரயோகிக்கும் இன மக்களால் தவறான முறையில் பயன்படுத்தப்பட்டு வருவதனைக் காணக்கூடியதாக இருக்கிறது. தமிழ் மொழி தோன்றிய நாட்டிலாகட்டும் அல்லது தமிழர்களின் பண்பாடுகளை ஓரளவிற்காவது பின்பற்றுகின்ற இலங்கையிலாகட்டும் புலம்பெயர் வாழ் தமிழ்மக்களிடத்திலாகட்டும் எங்கும் சரி தமிழ்மொழியைப் பிரயோகிக்கும் போது தமிழ்மொழி உச்சரிப்பு முறையிலும்சரி எழுத்து வடிவத்திலும் சரி பல்வேறு தவறுகள் நிகழ்ந்து வருகின்றமை தமிழ்மொழி மீதும் இனத்தின் மீதும் பற்றுக்கோடாக இருப்பவர்களின் துயர்மிகுந்த ஆதங்கமாக அமைகிறது. தமிழ்மொழியானது இற்றைக்கு மூவாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட காலத்தில் தொல்காப்பியம் தந்த தொல்காப்பியர் காலத்திற்கு முன்பிருந்தே வளமான இலக்கண அமைப்பையும் வனப்புமிக்க இலக்கியச் செழுமையையும் கொண்டு சிறப்பாக அமைந்த செம்மொழியாகத் திகழ்ந்து வருகிறது. தமிழ்மொழி அதன் தனித்தன்மையை இழப்பதற்கு அவ்வப்போது தமிழ் நாட்டை ஆட்சிபுரிந்த அன்னியரைக் காரணமாகக் குறிப்பிட்டுக் கொள்ளமுடியும்.பல்லவர் போர்த்துக்கேயர் ஒல்லாந்தர் மற்றும் ஆங்கிலேயர்கள் மாறி மாறி தமிழகத்தை ஆட்சி புரிந்தமையால் தமிழ்மொழியும் பல மாற்றங்களைச் சந்தித்தது. இந்நிலையில் இன்று ஆங்கில மொழியின் தாக்கம் உயர்ந்திருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது.தமிழ் மொழியுடன் ஆங்கிலத்தை ஒப்பு நோக்கும் போது ஆங்கிலமானது தற்காலத்துக்கேற்ற மொழியாகவும் வணிக மொழியாகவும் காலத்திற்கு காலம் வளர்ந்து வருகின்றமொழியாகவும் உலக மொழிகளிலிருந்து அதிகளவு சொற்களைக் கடன் பெற்றும் புதுப்புது நூல்களை உருவாக்கி வருகின்ற பன்னாட்டு அரசியல் மொழியாகத் திகழ்கிறது. ஆனால் தமிழ் மொழியானது அப்படியல்ல நிறைந்த சொல்வளமும் நுணுக்கமான பொருள் அமைப்பும் உடையதாகும். அரசியல் ரீதியான ஆதரவு இன்மையாலும் பிற மொழியின் கலப்பினாலும் அதன் தனித்தன்மையை இழந்தும் குறிப்பாக ஆங்கில மோகத்தால் தன் சொந்தமக்களாலே புறந்தள்ளப்படுவதாகவும் பல அரும் பெரும் சொற்களைக்கூட காலம் தோறும் இழந்து வருகின்றமை தமிழ்மொழியின் இழப்பிற்கு துணைபுரிகின்றன. இக்காலத்தில் தமிழ் வாக்கிய அமைப்புக்கள் ஆங்கில மொழியினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கின்றன.தமிழ் மக்கள் வாழுகின்ற பகுதிகளில் தமிழ் மொழியானது புறக்கணிக்கப்பட்டு வருகின்றமை கண்கூடு.

தமிழ் மொழியை தூயதாக அதன் தனித்துவம் மாறாமல் பயன்படுத்துவோர் அரிதிலும் அரிது என்றே கூறவேண்டும். ஆயினும் ஈழத்தில் போராட்ட காலத்தில் எமது தமிழ் ஓர் உன்னத நிலையை அடைந்திருந்தது. அன்று ஈழத்திலே தமிழோடு ஆங்கிலத்தை கலந் தமிங்கிலம் பேசிய தமிழரைக் கண்டு வெகுண்டெழுந்த ஈழத்தின் உணர்ச்சிக் கவிஞர் காசியானந்தன் "தமிழா நீ பேசுவது தமிழா" அன்னையைத் தமிழ் வாயால் மம்மி என்றழைத்தாய்அழகுக் குழந்தையை பேபி என்றழைத்தாய்என்னடா தந்தையை டாடி என்றழைத்தாய் இன்னுயிர் தமிழை நீ கொன்று தொலைத்தாய் உறவை லவ் என்றாய் உதவாத சேர்க்கை ஒய்ப் என்றாய் மனைவியை பார் உன்றன் போக்கை இரவை நைற் என்றாய் விடியாதுன் வாழ்க்கைஇனிப்பை ஸ்வீட் என்றாய் அறுத்தெறி நாக்கை என தனது கவி வரிகளால் தமிங்கிலம் பேசிய தமிழர்கள் முகத்தில் அறைந்தார்.தமிழன் என்று

**ஜெ.வினோத்**
யாழ்ப்பாணம்

சொல்லடா தலைநிமிர்ந்து நில்லடா என்ற கூற்றுக்கு இணங்க தமிழனுடைய வீரத்தையும் தமிழ் மொழியின் பெருமையையும் உலகறியச் செய்தான் எமது தானைத் தலைவன். தமிழினத்தின் விடியலுக்காகவும் எமது தாய் நிலத்துக்காகவும் தமது இன்னுயிர்களை ஆகுதிகளாக்கினார்கள் தமிழ் பெற்ற எம்மாவீரர்கள் எமது தாய் மொழியின் சிறப்பையும் தமிழர் வீரத்தையும் உலகறியச்செய்யப் புறப்பட்ட எம்வீரமறவர்கள் ஈழத்தில் தனித் தமிழ்மொழிப் பிரயோகத்தை வலுப்படுத்த முற்பட்டனர். ஈழமண்ணில் பிறந்த தம் மகவுகளுக்கு பெற்றோர் அழகான தமிழ்ப் பெயர்களைச் சூடிமகிழ்ந்தனர். வர்த்தக நிறுவனங்களின் பெயர்ப்பலகைகள் அனைத்தும் தூயதமிழில் பொறிக்கப்பட்டு எங்கும் தமிழ் நிறைந்திருந்தது. ஆயினும் தமிழன் வீரம் கண்டு கிலிகொண்ட சில நாடுகளின் கபடத்தனத்தால் துரதிஸ்டசவசமாக எமது போராட்டம் இடைநடுவே கருகிவிடவே யுத்தம் முடிவுக்கு வந்த பின்னர் தமிழ்மொழியின் வீச்சும் சற்றுத் தளர்வடையத் தொடங்கியது. இன்று எமது தமிழர்களில் பலர் தமது தாய் மொழியை எழுத்துப்பிழையின்றி எழுதத் தெரியாதவர்களாகவும் சரியாக உச்சரிக்கத் தெரியாதவர்களாகவும் மாறிவருவது வேதனைக்குரிய விடயமாகும். ஈழத்தில் தமிங்கிலம் பேசும் வழக்கம் மீண்டும் வீச்சடைந்து வருகிறது. இத்தகைய போக்கு எம்ம வரிடையே முளைவிட வெளிநாடுகளில் இருந்து எமது ஈழத்துக்கு வருகைதரும் தமிழர்களே தூண்டல் பேறுகளாக அமைகின்றனர். எமது மண்ணிலே பிறந்து வளர்ந்து கொடிய யுத்தத்தால் புலம்பெயர்ந்து வெளி நாடுகளில் தஞ்சமடைந்து இன்று ஈழம் திரும்பும் பலருடைய நாவில் எமது தாய்மொழியாகிய தமிழ்மொழிக்குப் பதில் அந்நிய மொழியாகிய ஆங்கிலம் புரள்வதையே அவதானிக்கமுடிகிறது. ஏன் என்றால் வெளிநாட்டில் இருந்துவிட்டு இங்கு வந்து தனித்தமிழில் கதைத்தால் மரியாதைக்குறைவு என எண்ணும் போக்கே இன்று பலரிடத்தில் நிலவுகிறது. இதனால் தமிழ்மொழி பேசாது பந்தாவுக்காக நுனிநாக்கில் ஆங்கிலம் பேசித்திரிகின்றனர். இவர்களுடைய இச்செயல் ஈழத்தில் வாழ்ந்துகொண்டிருக்கும் எமக்கு கடும் விசனமளிப்பதாகவே உள்ளது. இன்று பேச்சு மொழியிலானாலும் சரி எழுத்து மொழியிலானாலும் சரி ஆங்கில மொழியின் தாக்கம் எல்லைமீறிச் சென்று கொண்டிருக்கிறது. இந்நிலையில் தமிழர்கள் ஏனைய பிறமொழிகளைக் கற்றுக்கொள்ளக்கூடாது என வலியுறுத்துவது இக்கட்டுரையின் நோக்கமன்று. நாம் அனைவரும் பிறமொழிகளைக் கற்றுக்கொள்வதில் தவறேதும் இல்லை ஆயினும் எமது தாய்மொழியாகிய தமிழ் மொழியின் தனித்துவம்மாறாமல் எமது மொழியைப் பாதுகாக்க வேண்டும். ஓர் இனத்தின் சான்றான மொழி பாதுகாக்கப்படுமேயானால் அவ்வினத்தின் ஸ்திரத்தன்மையை உறுதிசெய்ய முடியும். இல்லையேல் அவ்வினம் அழிக்கப்பட்ட இனமாக ஒடுக்கப்பட்ட இனமாக இனம் என்ற அடையாளமே இல்லாத ஓர் இனமாக மாறுதல் அடையக்கூடிய அதிகபட்ச சந்தர்ப்பங்களைக் கொண்டுள்ளது. இதில் எமது இனமும் விதிவிலக்கல்ல என்பதைத் தமிழர்களாகிய நாம் அனைவரும் புரிந்துகொண்டு நடப்போமேயானால் எமது தமிழ் எமது மொழி என்றுமே தனித்துவம் மிக்கதாக மிளிரும். எனவே உலகெங்கும் வாழும் தமிழ்பேசும் மக்கள் அனைவரும் பொதுஇடங்களில் உங்கள் தாய்மொழிபேச வெட்கப்படாதீர்கள் நாகரிகம் எனும் மாயையில் சிக்கி எமது மொழியை சிதைக்காதீர்கள் வெளிநாடுகளில் பிறக்கும் உங்கள் குழந்தைகளுக்கு எமது தாய்மொழியாகிய தமிழ்மொழியை சீராகபேச எழுதக் கற்றுக்கொடுங்கள் தாய்மொழியின் பெருமையை உணர்த்துங்கள். அவ்வாறு நடப்பீர்களேயானால் உங்களால் எங்களால் தமிழ் என்றும் வாழும் நீண்டு நிலைக்கும்.

**"தமிழுக்கும் அமுதென்று பேர் அந்தத் தமிழ்இன்பத் தமிழ்எங்கள் உயிருக்கு நேர்"**

**பாரதிதாசன்**




**எப்போதும் பின்வரிசையில் ஒழியாதீர்கள் முன் வரிசைக்கு வாருங்கள்.**



# போர்

மூலம்: ஜோர்ஜியமொழி

மொழிமாற்றம் சுகி சுவிஸ்

I.

என் கிணறு வற்றிப்போய்க் கிடக்கிறது
மரங்களிலே தொங்கும் பழங்களைப் போல
நீர்த்திவலைகள் தொங்கிக்கொண்டிருக்கின்றன,
எனக்கென்றோர் தாயகமில்லை.

II.

என்வீட்டு அயலவனின் கதவில்
தொங்கிக்கொண்டிருந்த பலகையிலிருந்து
ஒரு எடுகோளை
முடிச்சவிழ்த்தேன் – அவை
தாவரத்தின் வேரோடிய தடங்களும்,
விலகிச்செல்லும் பாதங்களின் சுவடுகளுமாய்!
எனக்கென்றோர் தாயகமில்லை.

III.

நானோ ஒரு இறந்த கடல்
நுனிநாக்கினால் கூட உயிர்ப்பிக்கமுடியாதபடி
இங்கே உப்பும் செத்துப்போய்க் கிடக்கிறது.
நீ பருகிப் பசியாறும் முலைகளான,
பாய்ந்தோடும் இரு நதிகளும் இங்கில்லை.
எனக்கென்றோர் தாயகமில்லை.

IV.

நீ என்னைக் காதலிக்கின்றாய்
என்று மட்டும்
என்னிடம் சொல்லிவிடாதே,
எனக்கது வேண்டியதில்லை என்பதால்
நான் என் காதுகளை இறுக
மூடிக்கொள்கின்றேன்,
இடைச்சொருகும் உன் குரல்களால்
என் காயங்களை நிரப்புகின்றேன்,
எனக்கென்றோர் தாயகமுமில்லை
காதலில் எந்த அர்த்தமுமில்லை
ஒருவேளை நான் கடலில்
பெற்றெடுக்கப்பட்டிருக்கலாம்.

V.

என் கிணறு வற்றிப்போய்க் கிடக்கிறது
மரங்களிலே தொங்கும் பழங்களைப் போல
நீர்த்திவலைகள் தொங்கிக்கொண்டிருக்கின்றன,
எனக்கென்றோர் தாயகமில்லை.

**உலகில் உள்ள எல்லா எழுத்துக்களின் வடிவங்களை காண்போமாயின் அதன் கட்டமைப்பு என்பது படுக்கை கோடு(horizontal line) , செங்குத்தான கோடு(vertical line), வளைவு(curve), வட்டம்(circle), அரை வட்டம்(half circle) என்று இவற்றில் ஏதோ ஒன்றோ அல்ல இவற்றுள் ஒன்று, இரண்டோ**

**அடங்கிவிடும்.ஆனால் நம் தமிழ் மொழியின் முதல் எழுத்து "அ" இவற்றில் எல்லா வடிவங்களையும் உள் அடக்கியது என்பது ஆச்சர்யத்தை தருதிறது. நம் தமிழ் மொழியின் முதல் எழுத்து என்பது உலகில் உள்ள எல்லா எழுத்து வடிவங்களும் இதனுள் அடக்கம் என்பதே குறிப்பதாக தெரிகிறது.**
**தமிழனின் மொழி ஆளுமை எழுத்தாளுமை என்றுமே வியக்க வைக்கிறது !**

–மீனாட்சி சுந்தரம்–



# சிவலையும் சுருட்டும்

கேசு பரமசாமி.

யாழ்ப்பாணத்தின் மைய பகுதியில் இருந்து சுமார் இருபத்தி ஐந்து கி.மீ. தூரத்தில் தள்ளி இருந்தது எங்கள் கிராமம். முப்பது ஆண்டுகளுக்கு முன்னால் எங்கள் கிராமம் எப்படி இருந்தது என்றால் என்றால் நீங்கள் பாரதிராஜா படத்தில் பார்க்கும் கிராமம் போல இல்லாமல்கேரளாவை ஞாபகபடுத்துவது போல இருக்கும் எங்கள் கிராமம். ஒவ்வொரு வீடும் தனிதனி ஓட்டு வீடுகள் அல்லது ஆஸ்பெஸ்டாஸ் ஷீட்டினால்

செய்யப்பட்ட கூரைகள், ஒலைக்கொட்டில்கள் என ரம்மியமாக இருக்கும். காணி இல்லாதவர்களோ அல்லது சொந்த வீடு இல்லாதவர்களோ எங்கள் ஊரில் காண முடியாது. மா, பலா, தென்னை உட்பட ஒருவருக்கு தேவையான எல்லா காய் கறிகளும், பழங்களும் அதே வீட்டிலேயே பெறக்கூடிய அளவுக்கு வசதியாகவும், பூக்களால் நிரம்பியதாகவும் இருக்கும். கருவேல மரங்களை நீங்கள் எங்கும் காண முடியாது. ரோடுகள் பெங்களூர் ஹைவே போல இல்லாமல் ஓரளவு குண்டும் குழியுமாக இருப்பதுடன் எல்லா வீடுகளையும் இணைப்பது "ஒழுங்கை" என நாங்கள் அழைக்கும் ஒற்றையடிபாதைதான். கடுகுநாவல் பற்றைகள் நிரம்பி இருக்கும். எங்கள் ஊரின் மண் என்பது இரத்ததினால் சிவந்தது போல கடும் சிவப்பு கலரில் இருப்பதோடு இந்த மண்ணை யாழ் நகரின் பிற பகுதிகளில் இருந்து வந்து டிராக்டர்களில் ஏற்றிசெல்வதை கூட நான் கண்டிருக்கிறேன். எங்கள் ஊரின் பிரதான தொழில் என்பது விவசாயம். அங்கே பணப்பயிராகபுகையிலை பயிரிடுவார்கள். அதனால் ஒரு ஆள் படுக்க கூடிய அளவு பெரிய பெரிய புகையிலைகள் வளர்ந்து அந்த ஊரே பச்சைபசேல் என்றிருக்கும். ஏக்கர் கணக்கான

இந்த விவசாய காணிகளில் வெங்காயம்,மிளகாய், மரவள்ளி, தக்காளி, பச்சைபயறு இப்படி பல பயிர்களையும், புகையிலையையும் மாற்றி மாற்றி பயிரிடுவார்கள். இத்தனைக்கும் ஆற்றுபாசனம் என்பது இல்லவே இல்லை. முழுவதும் கிணற்று நீர் பாசனம் தான். புகையிலைகள் வளர்ந்த பின்னர் ஆட்களை வைத்து வெட்டி அதனை குழியில் இட்டு பதனபடுத்தி பின்னர் கொழும்புவுக்கு

லாரிகளில் ஏற்றுவார்கள். தென்னைமர காற்று, பயிர்களின் வாசனை, தமரோன், பொலிடோல் போன்ற மருந்துகளின் வாசனைகளும் அடித்தபடி இருக்கும். கிளுவை மரங்களும், பூவரசு மர இதமான காற்றும் இதமாக வீச ரேடியோவில் கே.எஸ். ராஜா அல்லது அப்துல்ஹமீது இவர்களது குரல்களில் ஒலிச்சித்திரம் கேட்டபடி மக்கள் இருப்பார்கள். ஊருக்கு ஒதுக்குபுறமாக ஒரு வைரவர் கோயிலும், தேங்காய் உரிக்கும் உல்லு, சப்பறம் கட்டும் சகடை, பனை வடலி, சந்தை, பனையோலையால் வேயப்பட்ட வேலிகள், கரையான் அரித்த சில கொட்டில்கள், போன்ற கிராமத்து அம்சங்களும் இருக்கும். வேலையில்லாதவர்கள் என்பதே கிடையாது என்பது போல சுருட்டு சுற்றும் தொழிலாளர்களும், சுருட்டு முதலாளிகளும் இந்தியாவில் இருந்தும் கச்சதீவில் இருந்தும் சாமான்கள் கொண்டுவந்து விற்பனை செய்யும் முதலாளிகள் என பலதரப்பட்ட மனிதர்கள் நிரம்பிய ஊர்.. சுருக்கமாக சொல்லப்போனால் வறுமை என்பதே என்னவென்று தெரியாமல் இருந்தது எங்கள் கிராமம். எங்கள் அம்மாவினது மூத்த சகோதரன் தான் "சண்டியன் சின்னத்தம்பி" என ஊரில் பெரும்பாலாரால் அழைக்கப்பட்டவர். எங்கள் மாமாவுக்கு "சிவலை" எனப்படும் புனைப்பெயரும் உண்டு. காரணம் அவரது தோற்றம் கிட்டத்தட்ட நடிகர் "ரியாஸ்கான்" போன்ற கட்டுமஸ்த்தான உடலமைப்பும் அவரது சிவந்த உடம்புமாகும். " சிவலை" எங்கள் கிராமத்தில் பிரபலமாதற்கு இன்னொரு காரணமும் என்னவென்றால்
தினமும் அழுகை சத்தம், கூக்குரல் தொடர்ந்து கேட்கும் ஒரே வீடு எங்களுடையதுதான். ஒன்று குடித்துவிட்டு எங்கள் சித்திமாரையோ அல்லது வேறு யாரையாவது போட்டு அடிப்பார், அல்லது
யாரையாவது கத்தியால் குத்திவிட்டு வந்திருப்பார். ஒன்றுமில்லை என்றால் சும்மாசரி வீட்டிற்கு
போலீஸ் வந்து இருக்கும். இப்படி தினமும் நிம்மதி இல்லாமல் போனது எங்கள் வாழ்க்கை. போதாக்குறைக்கு "காச்சான்" எனப்படும் கள்ளச்சாராயம் காச்சுவதிலும் அதை ஊர் ஊராக சப்பளை பண்ணுவதிலும் கூட ரொம்ப கெட்டிக்காரர்களாக எங்க ஆட்கள் இருந்தனர். "சிவலை" மாமா காச்சானை தரம் பிரித்து பார்க்கும் "டேஸ்ட்" மாஸ்டராக வேறு பணியாற்றி அலப்பறை பண்ணுவார். எனவே போலீஸ் இங்கே அடிக்கடி வருவது வாடிக்கை. "சங்கக்கடை" எனப்படும் கூட்டுறவு சங்கத்தில் எங்கள் ஊரில் தான் சீனியும், டீசலும் அதிகமாக காலியாகும் காரணம் காச்சான் காச்ச இவையிரண்டும் தான் அதிகமாக தேவை.
சிவலை தனியாக ஐயாயிரம் சுருட்டுகள் ஒருநாளில் சுற்றுமளவு கெட்டிக்காரர் என்பதுடன் நன்றாக கடுமையாக உழைத்து குடும்பத்தினரை எந்த கஷ்டமும் இல்லாமல் பார்த்துவந்தார். எனவே அவர் வீட்டில் என்னதான் அட்டூழியம் பண்ணினாலும் பெரிதாக யாரும் ஒன்றும் சொல்வதில்லை. பெரியதாக படித்தவர் இல்லையென்றாலும் அவர் கேரக்டரில் ஒரு நேர்மை இருக்கும். " சிவலையோட

## சேர்ந்து வாழ்தலே சிறந்த வலிமையாகும்

சண்டையா?!! அப்பசரி உனக்கு இனி ஜென்மத்துசனி தான்"!!!என ஊரார் பயப்படுவார்கள். எனவே ஊர் மைனர்கள் குமர்பெண்களாக இருந்த எனது சித்திமாருக்கு சைட் அடிக்கவே பயப்படுவார்கள். எதோ சண்டையில் சிவலை மாமா முன்பல்லு தனியாக காணாமல் போனதால் அதற்கு தங்க பல்லு கட்டியிருந்தார். இந்தியா சங்கு மார்க் லுங்கிகள், ரலி எனப்படும் சைக்கிள் என தரமான பொருட்களை மட்டுமே மாமா பயன்படுத்துவார். நாங்கள் விளையாடிக்கொண்டு இருக்கும்போது எங்க வீட்டு பூனை தலைதெறிக்க ஓடினால் மாமா சைக்கிளில் வருகிறார் என நாங்கள் தெரிந்துகொண்டு நாங்களும் சீரியஸாக படிப்பதுபோல பாவ்லா காட்டுவோம். வேலைவிட்டு வந்ததும் ஒருமணிநேரம் கடுமையாக எக்சசைஸ் செய்துவிட்டு எண்ணை குளியல் போடுவார்.
நான் ஒருநாள் மாலை பள்ளிக்கூடம் போய்விட்டு வந்துகொண்டு இருந்தேன். வழக்கம்போல எங்கள்வீட்டிற்கு முன்னால் கூட்டமாக இருந்தது. வழக்கமான தகராறு போல இருக்கும் என நான் நினைத்துக்கொண்டு கிட்டவந்து பார்த்தேன். அங்கே ஒரு கர்பிணிப்பெண் வயித்தில் கத்தியால் குத்தப்பட்டு குற்றுயிராக துடித்தபடி இருந்தார். பெண்கள் எல்லாரும் பயந்தபடியும் பதட்டமாகவும் துணிகளை கிழித்து கத்திகுதிய இடத்தில் பிடித்தபடி "ஐயோ ஐயோ" என கத்தியபடி அந்த கர்ப்பிணி பெண்ணை காப்பாற்ற போராடினர். " இந்த சிவலை வேசமேனுக்கு இதே வேலையா போச்சு!! இண்டைக்கு விடப்படாது !!! உவருக்கு குடுக்கதான் வேணும்!!!" என ஒருவர் கத்தியபடி திமிர பலபேர் அவரை அமுக்கி பிடித்தபடி இருந்தனர். ஒரு ஐம்பது பேர் ரோடு முழுவதும் அங்குமிங்கும் அலைந்தபடி இருந்தனர். எங்கள் வீட்டு ஒழுங்கையே கலவர பூமியாக மாறியது..சிவலை மாமாதான் கதியால குத்திட்டார் என்பதை கன்பார்ம் செய்துகொண்டு மெதுவாக வீட்டுக்குள் நுழைந்து பார்த்தேன். வீட்டிலும் ஒரே கலவரம். ஆச்சி, சித்திமார் தலையில் கையை வைத்து குய்யோ முறையோ என கத்தியபடி இருந்தனர்.." சிவலை!! இனி நீ ஜென்மத்துக்கு வெளிய வரேலாது!! அவள் செத்துட்டாள்!!கொழும்புக்கு ஓடடா " என சிலர் தாறுமாறாக அட்வைஸ் பண்ணினார். அவர் போலீசில் மாட்டக்கூடாது என்பதற்காக வேறு உடுப்பு போட்டு ஒரு சிலர் பத்திரமாக சிவலை மாமாவை பின்பக்க வடலி வழியாக கூடி சென்றனர்.
எனக்கு சின்ன வயது தான் அப்போது என்றாலும் அம்மாவிடம் போய் என்ன நடந்தது என்று கேட்டேன்.

“ சிவலை மாமா பக்கத்து வீட்டு பாலச்சந்திரனோட சண்டை!!!அவர் கத்தி எடுக்க மாமாவும் கத்தி எடுத்தார்.!!. பிறகு அவருக்கு குத்தபோக மனிசி குறுக்கை வந்த்துட்டாள்!!! கத்தி தவறி அவளின்ரை வயித்தில குத்திப்போட்டுது..!! என்றார் அம்மா கண்ணை கசக்கியபடி. “ என்ன இருந்தாலும் அவள் பெட்டை பாவம் !! என சித்தியும் அழு-தார். எனக்கு எது சரி எதுபிழை என தெரியாத வயது. சிவலை மாமா நல்லவரா கெட்டவரா என தெரியவில்லை.. அந்த காலத்தில் யாழ்ப்பணத்தில் மாடுகளை கொல்லக்கூடாது என சட்டம் இருந்ததாகவும் அதைமீறி பாலச்சந்திரன் ஆட்கள் களவாக மாடு அடித்ததனால்தான் (கொன்றது) சிவலை மாமாவுக்கும் அவருக்கும் தகராறு உண்டாகி அது இப்போ கத்திக்குத்தில் வந்து நின்றது என வேறு ஆட்கள் பேசிக்கொண்டனர். அந்த பெண் ஆஸ்பத்திரியில் சீரியஸாக இருப்பதாகவும் குழந்தை இறந்தது விட்டதாகவும் அத்துடன் சிவலை மாமாவுக்கு எதிராக கொலைகேஸ் போட்டு போலிஸ் தேடிக்கொண்டு இருந்தனர். மாமா வீட்டுக்கு வராமல் எங்கேயோ தலைமறைவாக இருந்தார். ஒருநாள் சித்தி என்னை பின்னேரம் கூட்டிக்கொண்டு ஒரு தோட்டம் வழியாக சென்றார். அடர்ந்த மரவள்ளி தோட்டத்துக்கு நடுவில் மாமா எண்ணை பூசிய உடம்புடன் ஜட்டியுடன் படுத்து இருந்தார். மரங்களின் அசைவுசத்தம் கேட்டதும்” பட்” என எழுத்து கத்தியை கையில் எடுத்தார். பிறகு சுதாரித்துக்கொண்டு இருவரும் ரகசியமாக எதோ பேசிக்கொண்டனர். சித்தி அழுதபடி வீடுக்கு வந்தார். அதன் பின்னர் இரண்டு நாள் கழித்து சித்தி என்னை 770 பஸ்ஸில் ஏற்றி யாழ்ப்பாணம் டவுனுக்கு கூட்டிபோனார். அப்போதுதான் நான் முதன்முதலாக யாழ்ப்பாணம் நகரை பார்க்கிறேன். அழகு என்றால் அப்படி ஒரு அழகு..இருபுறமும் கடைகளும், வாகனங்களும், அன்னாசி பழுங்களின் வாசனையும் மூக்கை துளைத்தன. “லிங்கம் கூல் பாரில்” நாங்கள் கூல் டிரிங்க்ஸ் குடித்தோம். சீமாட்டி டெக்ஸ்டைல்ஸ், மலாயன் கபே, சுபாஸ் கபே போன்ற கடைகளின் விளம்பர போர்டுகளை நான் பார்த்துக்கொண்டே சென்றேன். சிவாஜி, ரஜினி, கமல் போன்ற நட்சத்திரங்களின் “கட் அவுட்டுகள்” அவ்வளவு தத்துரூபமாக இல்லை என்றாலும் ஜிகினா வேலைப்பாடுகளுடன் படங்களின் பெயர்கள் சந்திக்கு சந்தி ஜொலித்தன. அப்போது சித்தியின் வயதை ஒத்த ஒரு ஆள் முரட்டு தோற்றத்தில் வந்து அங்கே சித்தியுடன் பேசினார். அவர்தான் சித்தியின் காதலன் என்பது அதற்கு பிறகு நாங்கள் வின்சர் தியேட்டரில் “நினைத்தாலே இனிக்கும்” படம் பார்த்தபோது அவர்கள் நடந்துகொண்டதை வைத்து நான் அறிந்துகொண்டேன். அப்படி ஒரு முரட்டு ஆசாமியை சித்தி எப்படித்தான் விரும்பினாரோ என்னமோ தெரியவில்லை.

என்னை கையில் பிடித்தபடி சித்தியும் அவரும் நடந்து ஆரியகுளம் சந்தி தாண்டி போய் குறுக்கு சந்தில் உள்ள ஒரு வீட்டில் 35 வயது மதிக்கத்தக்க ஒரு பிரபல வக்கீலுடன் பேசி சிவலை மாமாவின் கேஸை நடத்தும்படி கேட்டுக்கொண்டனர். நீண்ட ஆலோசனை நடந்த பின்னர்




**ஒரு வருட காலத்துக்குள் யூரோ 24 விகிதம் வீழ்ந்துவிட்டது. தைமாதத்தில் இருந்து மட்டும் டொலருக்கெதிராக யூரோவின் வீழ்ச்சி 12.3 விகிதமாகும்.இந்தக் கணக்கில் போனால் ஐரோப்பிய ஒன்றியத்தின் ஏற்றுமதி மீண்டும் சூடுபிடித்துவிடும்.**

நாங்கள் வீடு திரும்பினோம். கத்தியால் குத்தப்பட்ட பெண்ணின் சொந்தக்காரர்களால் நாங்கள் பழிக்குபழி வாங்கப்பட கூடும் என்பதால் அவதானமாகவே சித்தி நடந்துகொண்டார். ஒரு குறிப்பிட்ட நாளில் சிவலை மாமா மரவள்ளி தோட்டத்தில் இருந்து வெளியே வந்து யாழ்ப்பான நீதவான் முன்னாள் சரணடைந்தார். அவர் யாழ்ப்பாணம் கோட்டையில் சிறை வைக்கப்பட்டு சிலநாட்களில் வக்கீலின் வாதாட்ட திறமையால் வெளியே வந்தார். இதற்காக சிவலை மாமா வாங்கிய காணி சொற்ப விலைக்கு விற்கப்பட்டு நாங்கள் வேறொரு வீடிற்கு குடிபோனோம். குழந்தை இறந்துவிடாலும் மனைவி காப்பாற்றப்பட்டார் ஆனாலும் பாலச்சந்திரன் சிவலை மாமா மீதும் எங்கள் மீதும் எப்பவுமே ஒரு கறள் (பகைமை) வைத்து இருந்தார். அவர் அதை நா-ளடைவில் மறந்துவிடுவார் என நாங்கள் நம்பினோம். கோட்டையில் போலிஸ் போட்ட போடில் மாமா எழுந்து நடக்க பல நாள் ஆனது.

காலம் இப்படியே உருண்டு ஓடியது. நாங்கள் எல்லாரும் ஓரளவு வளர்ந்து பெரியவர்கள் ஆனோம். அந்த முரட்டு ஆசாமி சித்தியை நயவஞ்சகமாக ஏமாற்றி வேறு கல்யாணம் செய்துகொண்டார். சித்தி அநாதை ஆனார். இந்த காலத்தில் இயக்கம் ஆரம்பமாகி எல்லாருடைய தலை எழுத்தையும் மாற்ற ஆரம்பித்தது. “சண்டியன் சின்னத்தம்பி” என்று அழைக்கப்பட்ட சிவலை மாமா ஒன்றும் செய்ய முடியாதவர்

ஆனார். கிட்டத்தட்ட நடுவீதிக்கு வந்துவிட்ட எங்கள் குடும்பம் அப்படியே சின்னாபின்னமாக சிதறியது.

அப்பொழுது இந்தியன் ஆமி யாழ்ப்பாணம் வந்து பல பிரச்சனைகளை உண்டாகியது. எங்க கிராமம் உயர்பாதுகாப்பு வளையத்துக்கு வந்து எல்லாரும் ஊரை காலிசெய்துகொண்டு உயிரை கையில் பிடித்துக்கொண்டு ஓட்டம்பிடித்தனர். ஓரளவு காசு உள்ளவர்கள் பத்தாயிரம் ரூபா காசு கட்டி அரை காற்சட்டையுடன் ஜெர்மன் அல்லது பிரான்ஸ் போனார்கள். அவர்களின் பாதிபேருக்கு படிப்பறிவோ அல்லது பொது அறிவுகூட கூட கிடையாது . ஒரு குறிப்பிட்ட காலத்துக்குள் ஊரே காலியானது. இரண்டாவது சித்தி மட்டும் ஓட வழியில்லாமல் ஓலைகுடிசையில் தனியாக தங்கியிருந்தார். அன்றிரவு ஆறு தமிழ் இளைஞர்கள் பெட்ரோல் ஊற்றி இந்தியன் ஆமி எரித்துவிட்டு அரைகுறையாக போட்டுவிட்டு போகும்போது விறகு எடுக்கவந்த இரண்டாவது சித்தி அதை பார்த்துவிடார். அதை அவர் மறுநாள் ஆட்களுக்கு சொல்வதற்கு முன்னமே இந்தியன் ஆமி ஊருக்குள் வந்து எங்கள் வீட்டை சூழ்ந்துகொண்டது. நான், சிவலை மாமாவும் மகன் நந்தன் மற்ற பையன்கள் எல்லாருக்கும் இப்போது விபரங்களை புரிந்துகொள்ளும் அளவுக்கு வயதுக்கு வந்திருந்தோம். எங்கேயும் ஓட முடியாததனால் வீட்டுக்குள்ளேயே அடைபட்டு போனோம். அப்பொழுது வளைகுடாவில் இருந்து அனுப்பிய ஒரு ஹிந்தி ஒரு ஓடியோ காசெட் இல் இருந்து ஹிந்தி பாடல் மெதுவாக வந்துகொண்டிருந்ததை பார்த்த சில ஆமிக்காரன் வீட்டுக்குள் வரமால் வாசலிலேயே நின்றுகொண்டு ஒரு தலைப்பாகை ஆமி மட்டும் சித்தியை வீட்டுக்குள் போகும்படியும் தான் அவரை செக் பண்ணவேண்டும் எனவும் ஹிந்தியில் சொன்னான். சித்தி பயந்தபடி நடுங்கிக்கொண்டு இருந்தார். நாங்களும் பதட்டமானோம். காரணம் இந்தியன் ஆமி செக் பண்ணவென்று உள்ளே கூட்ட்ப்போனால் என்ன நடக்கும் என்று எல்லாருக்கும் தெரியும். சிவலை மாமா கூட எங்கேயோ போயிருந்தார். வேறு வழியில்லாமல் சித்தி முழிக்கையில் துப்பாக்கியை அவரின் தலைக்கு நேராக நீட்டினான் அந்த ஆறடி உயர தலைப்பாகை கட்டிய ஆசாமி. சித்தி வெலவெலத்து போய் மெதுவாக உள்ளேபோனார். அவனும் பின்னாலேயே போனான். மீதி ஆமிக்காரர் வெளியிலேயே நின்றுகொண்டு வேடிக்கை பார்த்தனர். ஒரு நிமிடம் கூட ஆகியிருக்கவில்லை அதற்குள் "தங்கச்சி!!!சத்தம்போட்டு கூப்பிடு!!!பெரிய ஆபிசர் வர்றாரு!!!" என அரைகுறை தமிழில் வேடிக்கை பார்த்துகொண்டு இருந்த ஒரு இந்தியன் ஆமி குரல் கேட்டது. இதுதான் சமயம் என பார்த்த சித்தியும் " ஐயோ ஐயோ " என பலமாக அலறினார். நாங்கள் குரல் வந்த திசையை பார்த்தோம். அவன் ஹிந்திகாரன் இல்லை..ஆனால் கொஞ்சம் தமிழ் தெரிந்த மலையாளி போல அதான் தமிழர்களை பிடிக்கதுவிடாலும் தமிழ் பெண் மானபங்க படகூடாது என நினைத்தானோ என்னமோ கத்திவிடான். அவ்வளவு தான் …கோபமாக குடிசையினுள் இருந்த வந்த அந்த தலைப்பாகை ஆமி, தனது



பேன்ட் ஜிப்பை சரிசெய்தபடி ஒரு கையால் துப்பாக்கியை பிடித்தபடி " பெஞ் சூத் …" என கோபமாக கத்தியபடி அந்த மலையாளி ஆமிக்கரனுக்கு "பொளேர்" என ஒரு அறை விட்டுவிட்டு ஹிந்தியில் தாறுமாறாக கத்தினான்…நாங்கள் பயந்துபோனபடி குடிசையினுள் பார்த்தோம்." அங்காடி தெரு" படத்தில் அஞ்சலியை திருட்டு குற்றத்துக்காக கடைக்குள் செக் பண்ணப்போன ஏ. வெங்கடேஷ் என்ன செய்வாரோ அதே அஞ்சலியை போல கூனி குறுகி சித்தி வெளியே வந்தார். பார்க்க பாவமாக இருந்தது. அறை விழுந்த சத்தம் கேட்டதும் ஒருங்கி வழியாக பட பட வென பெரிய கமாண்டர் தாடி தலைப்பாகையுடன் உள்ளே வந்தார். மலையாளி ஆமிக்காரன் ஹிந்தியில் நடந்ததை சொன்னான் கன்னத்தை தடவியபடி. பெரிய கமாண்டரும் " இவன் சொல்வது எல்லாம் உண்மையா " என்பதுபோல ஹிந்தியில் கேட்டார். சித்தி அந்த மலையாளியை பரிதாபமாக் பார்த்தார். அவன் கண்களால் " ஓம் " என சொல் என்பது போல சைகை காட்ட சித்தியும் " உண்மை " என சொன்னார். அவ்வளவுதான் அந்த நிமிடமே குடிசைக்குள் கூட்டிப்போன தலைப்பாகை ஆமிக்காரன் டிஸ்மிஸ் செய்யப்பட்டான். கோவமாக முறைத்தபடி வெளியேறினான் அவன். "சரக் சரக்" என பூட்ஸ் சத்தக்களுடன் எல்லாரும் வேகமாக நடந்து போனார்கள்..அவர்களில் அந்த மலையாள ஆமிக்காரன் சித்தியிடம் வந்து " இனிமேல் நீ இந்த வீட்டில் இருக்காதே!! அவன் எதாவது ஒரு காரணம் சொல்லி மறுபடி வருவான்!!! மறுபடி என்னால் உன்னை காப்பற்ற முடியாது!!!" என சொல்லி விட்டு வெளியேறினார். ..அடடா !! இப்படி ஒரு சில ஆட்களும் இருக்கத்தான் செய்கிறார்கள் என நாங்கள் நினைத்துக்கொண்டோம்.

மறு நாள் என்ன செய்யலாம் எங்கே போகலாம் என நாங்கள் யோசித்துக்கொண்டு இருந்தபோது

சிவலை மாமாவும் வீட்டுக்கு வந்து வெறும் மேலுடன் எங்களையெல்லாம் கூட்டிபோக சாமான்களை அடுக்கிக்கொண்டு இருந்தார். அப்போது வேலி "சரசர" என சத்தம் கேட்க நாங்கள் எட்டிப்பார்த்தோம். சொல்லி

வைத்தால்போல டிஸ்மிஸ் செய்யப்பட்ட அந்த தலைப்பாகை ஆமிக்காரன் சில ஆட்களுடன் வந்தான்.நான் ஓடவில்லை ஆனால் சிவலை மாமா மகன் நந்தன் (12 ) வயது தான் இருக்கும் ஓட்டம் பிடித்தான். சித்தி, சிவலை மாமா எல்லாரும் பதறியபடி இருக்க நேராக சிவலை மாமாவிடம் வந்து துப்பாக்கியை நீட்டினான். காரணம் அவரது வலது தோளில் ஒரு புலி வாயை பிளந்தவாறு இருப்பதுபோல ஒரு பச்சைகுத்தியிருந்தார் அதை அவன் கவனித்து விட்டான் . அவர் இதை தனது சின்ன வயதிலேயே (கிட்டத்தட்ட 60 காலகட்டத்தில்) குத்தியிருந்தார் என்பதுடன் அப்போது இயக்கம் எல்லாம் இல்லை என்பதுதான் உண்மை. அவருக்கு விதி பச்சை விதத்தில் வந்து விளையாடியது. அங்கேயே எங்கள் கண்ணெதிரிலேயே பூட்ஸ் காலாலும், துப்பாக்கி பின்பக்கத்தாலும் அடித்து பின்னி எடுத்தார்கள். மாமா மூஞ்சியெல்லாம் பிய்ந்து தொங்கியது..எங்களால் அழுவதை தவிர ஒன்றுமே செய்ய முடியவில்லை.. கைத்தாங்கலாக ரத்தம் வழிய வழிய அடித்து

தூக்கிக்கொண்டு போனார்கள். அந்த தலைப்பாகை ஆசாமி சித்தியிடம் "முடிந்தால் நீ வந்து இவனை காப்பாற்று பார்க்கலாம்"!!! என ஒரு நக்கல் சிரிப்புடன் சொல்லிவிட்டு போனான்.ஊருக்கு வெளியே ஓடிப்போனான் மாமா மகன் நந்தன் மறுநாள் பகல் யாரும் இல்லாத ஒரு பாழும் கிணற்றில் பிணமாக மிதப்பதாக தகவல் வர நாங்கள் எல்லாரும் சாமான்களை அப்படியே போட்டுவிட்டு பதறியபடி ஓடினோம். ஊரில் ஆட்கள் இல்லாத படியால் குறைந்த ஆட்களே நின்றிருந்தனர். பன்னிரண்டு வயதான நந்தன் மண்டை பிளந்தபடி ஒரு பெரிய ஆணின் தோற்றத்தில் மிதந்தான். "பாலசந்திரன் மனிசிக்கு கத்தியால குத்தின பாவத்துக்கு சிவலைக்கு இது தேவை தான் " என காதுபட சிலர் பேசினார். இரத்த மயமாக இருந்த கிணற்றில் இருந்து நந்தனை தூக்கி வெளியே எடுத்தனர். எனக்கு தெரிந்தவரை நந்தனுக்கு நன்றாக நீச்சல் தெரியும் அத்தோடு அந்த கிணற்றில் பாறைகள் ஏதும் இல்லை.. ஆனாலும் மண்டை பிளந்து சாகும் அளவுக்கு என்ன நடந்தது இருக்கும் என்பதை அபோது இருந்த மனநிலையில் நான் யோசிக்கவில்லை.. சிவலை மாமா இந்தியன் ஆமி பிடியில் சிக்கி உள்ளே இருக்கையில் குறைந்த சில ஆட்களுடன் நந்தனின் ஈமைகிரியைகள் நடந்தன. மாமா ரிலீசாகி வருவதற்குள் அவரது இரண்டாவது மகன் குமரன் அண்ணனின் சாவுக்கு பழிவாங்க இயக்கத்துக்கு ஓடிவிட்டான்..மகள் உஷா தன்னை பாதுகாக்க யாரோ ஒரு பையனுடன் ஓடிவிட்டாள். கடைசி மகனும்,

மனைவியும் மாத்திரமே சிவலை மாமாவை எதிர்பார்த்து சொந்த ஊரை விட்டு வந்து எங்களுடன் வேறு ஒரு சிறிய பகுதியில் குடியிருந்தனர்.சில நாட்கள் கடந்தது சிவலை

மாமாவை வலது முழங்காலுக்கு கீழே முறித்து, தங்கப்பல்லை உடைத்து ஒரு தடியுடன் நாங்கள் இடம்பெயர்ந்தது வாழ்ந்த ஒரு பகுதியில் விட்டு விட்டு போயிருந்தது இந்தியன் ஆமி. ஒரு கால் முறிந்த ஆண் சிங்கம் எப்படி இருக்குமோ அதேபோல ஒன்றுமே பேசமால் மௌனமாக அழுதபடி இருந்தார் மாமா. இதையெல்லாம் நாள் எதிர்பார்க்கவில்லை என்பதுபோல மிக நொந்து போயிருந்தார். பச்சை குத்தப்பட்ட புலிசின்னம் தீயினால் சுடப்பட்டு அங்கே ஒரு பள்ளமாக தோண்டப்பட்டு தோல் எலும்பு வெளியே தெரிவது போல இருந்தது..எவ்வளவு ஊனமாக்க முடியுமோ அவ்வளவு ஊனமாக்கி இருந்தனர். நந்தன் எப்படி இறந்தான் என்பதை கண்டு பிடிக்கும் அளவுக்கு அப்போது இலங்கை போலீசோ இராணுவமோ, நிவாகமோ இல்லை...உயிரோடு இருந்தாலே போதும் என்னும் அளவுக்கு இருந்தது நிலைமை..அதன் பிறகு ஒரு நாள் அரசால் புரசலாக நந்தன் எப்படி இறந்தான் என பேசிக்கொண்டார்கள். அதாவது மாமா கைதுசெய்யப்பட்ட அன்று நந்தன் பயத்தில் ஓடியதாகவும் அப்போது அவன் தவறி ஆள் அரவமற்ற தரைகிணற்றில் விழுந்ததாகவும் ஆனால் அவன் சத்தம் பலமணி நேரம் கேட்டதாகவும், பின்னர் ஏதோ ஒரு உருவம் அங்கே போய் ஒரு பெரிய பாறங்கல்லை தூக்கி மண்டையில் போட்டு கிணற்றிலேயே அவனை தீர்த்து கட்டியதாகவும் சொன்னார்கள். அது பழிவாங்கப்பட்ட இந்தியன் ஆமியா அல்லது பழிவாங்கும் நோக்கத்துடன் வேறு யாரோ கல்லை போட்டு அவனை கொலை செய்தார்களா என்பதுவும் இன்றுவரை தெரியாது..இதை கண்டு பிடிக்கும் வலிமையோ, தெம்போ சிவலை மாமாவுக்கும் கிடையாது....இப்படியே காலம்

சிவலை மாமாவையும் எங்களையும் கோரத்தாண்டவம் ஆடியது...கிட்டத்தட்ட முடமாக்கப்பட்ட சிவலை மாமா நடக்க முடியாமல் சிலகாலம் வன்னிக்குள் சென்று ஒரு ஒதுக்குபுறமாக தனியாக வாழ்ந்துவந்தார். அவரது இரண்டாவது மகன் குமரன் ஆனையிறவு முகாம் அடிபாட்டில் போராளியாக வீரமரணம் எய்தி மண்ணுக்கு உணவானான். மகள் கணவனை இயக்கத்துக்கு எதிரான யாரோ கடத்திசென்று அவனுக்கு வாய்க்குள் சுட்டு அவளை இரண்டு குழந்தைகளுடன் விதவையாக்கினர். மீண்டும் ஒரு கல்யாணம் செய்து இரண்டு குழந்தைகளுக்கு தாயான அவளுக்கு இரண்டாவது முறையும்

அதேபோல விதவையாக்கினர். கடைசிமகன் கூட வன்னியில் இருந்தபொழுது கண்ணிவெடியில் சிக்கி ஒருகாலை இழந்தான்..இதையெல்லாம் பார்த்து ஊனமான சிவலைமாமா மட்டக்களப்புக்கு போய் அங்கே யாருமே இல்லாமல் அனாதையாக இறந்துபோனார்.. புதைக்க கூட யாருமே இல்லாமல் போனதால் மட்டக்களப்பு கடற்கரையில் மூன்றடி ஆழத்தில் ஒரு குழிதோண்டி அவரை புதைத்துவிட்டு அங்கே ஒரு அடையாள கல்லைமட்டும் வைத்திருந்தனர்.. நாங்கள் அதை தேடிப்போகையில்

சுனாமி வந்து அங்கே எல்லாமே கடலுக்குள் போய்விட்டதாம்..சைவமும் தமிழும் தழைத்து ஓங்கிய ஈழத்து நாட்டில் இன்னும் கடவுள் இருக்கிறார் என நம்புகிறீர்களா? அப்படியானால் முள்ளி வாய்க்கால் சம்பவத்தில் சிவலை மாமாவின் எஞ்சிய மனைவி, மகள், பிள்ளைகள் எங்கே இருக்கிறார்கள்? அல்லது இருகிறார்களா இல்லையா என்பதை கடவுளிடம் கேட்டு சொல்லுங்கள்....




இமையனின் தோழ்பட்டையை உரிமையோடு இழுத்த நண்பன் வாணன் தான் இமையன்மீது வைத்திருக்கும் அன்பின் வெளிப்பாட்டையும் இவ்வளவு காலம் பிரிந்து தொடர்பற்றுஇருந்த நட்பின் தவிப்பையும் அணைப்பின் இறுக்கத்தில் வெளிப்படுத்தினான். இமையனும் நண்பனைக்கண்ட மகிழ்வில் தான் மனப்பாரத்தை இறக்கிவைத்துவிட்டு சிரித்தபடியே

"உண்மையாடா மச்சான் நான் நீ எண்டு நினைக்கவே இல்ல இங்கவந்து ஆளே மாறிட்டாயடா"என்று வாணனின் வயிற்றில் குற்றினான். "நீமட்டும். பின்ன எப்படி இருக்கிறாய் முந்தி இருந்த உடம்புல முக்காவாசியக்காணம்" என நட்புக்குள் தங்கள் மாற்றங்களை வேக

வேகமாக பரிமாறிக் கொண்டிருக்கையில் வாணன் "மச்சான் வாடா ரீ குடிச்சுக்கொண்டு கதைப்பம்"என்று இமையனின் கைகை பிடித்துக்கொண்டு மனம்விட்டு கதைத்து சிரித்துக்கொண்டே நடந்தனர்.

மேற்கத்ய நாடுகளில் ஒரே பாலினத்தை உடையவர்கள் வணக்கத்திற்கு பின்னான பழக்கம். முடிந்த அளவு நெருக்கமற்ற தொடுகைகள் அற்றதாகவே இருக்கும் அதையும் மீறி தொட்டுப் பேசிப்பழகினால் வெளியாட்களின் பார்வை "இரண்டுபேரும் மற்றதுகள் போல" என்ற தொனியீல் இருக்கும் உண்மைதான் மனித உணர்வுகளை மதித்து அவ்வாறான திருமணங்களை சட்டங்கள் அனுமதித்தபின் மக்கள் மனதில் இப்படி ஒரு கேள்வி எழுவதில் சற்றும் தவறில்லை என்று தான் நினைக்க வேண்டும். இமையன் வானன் நட்பு அப்படிப்பட்டதல்ல நீண்டகாலப்பிரிவின் சந்திப்பு

தேனிர்கடைக்குள் வந்த வாணனும் இமையனும் தாங்கள் இருவருக்குமான இருக்கையைத் தேடி அமர்ந்தனர் காலை நேரம் என்ற படியால் வேலைக்குப் போகும்முன் காலை உணவின் ஆரோக்கியம் உணர்ந்த ஒரு சில இளசுகள் இடியப்பமோ, பிட்டோ,தோசையோ ஏதாவது ஒன்றை உண்பது வழமை அதுவும் புலம்பெயர் வாழ்வில் தனிமை அவர்களின் சொந்தமாக இருப்பதால் முழு தமிழ் சாப்பாட்டுக் கடைகளும் தாய்வீடு போலவே இருக்கும். சாப்பாடுகளில் ஊர்சசுவையும் நாக்கை மகிழ்விக்கும் வாணன் இமையனிடம் "இடியப்பம் சாப்பிடுவமா மச்சி எனக்கு பசிக்குது நான் இன்னும் விடிய சாபிடல்லடா என்றான். சேவரிடம் "அண்ணா ரெண்டு பேருக்கும் இடியப்பம் கொண்டுவாங்க"

இமையன் என்று வெளிநாடு ஏறினானோ அன்றில் இருந்து காலைச் சாப்பாடு அறவேயில்லை மதியம் அப்படி இப்படிதான் இரவுச் சாப்பாடு மட்டும்தான் அதுவும் ஒரு கறி, சோறு என்று காலம் போய்க்கொண்டு இருக்கின்றது. "சரி மச்சி சொல்லுடா என்னடா இது மெலிஞ்சு கேவலமாய் இருக்கிறாய் ஒழுங்கா சாப்பிர்றது இல்லையா ? வீட்ட எல்லாரும் எப்படி இருகீனம் தங்கச்சிக்கு கலியாணம் நடந்திட்டா. நீ கலியாணம் செய்திட்டியா மச்சி". என கடும்அக்கறையுடனும் ஆதரவுகலந்த உரிமை-யோடும் வாணன் விசாரித்த தொனி இமையன் மனதை நெகிழவைத்தது அந்த நெகிழ்வின் பின்நே ஒரு வலி அவன் மனதை குமுறி கண்ணை உடைத்துக்கொண்டு கண்ணீர் பெருக அழுதுகொண்டே

"இல்லட மச்சான் தங்கச்சியும் அப்பாவும் செல்விழுந்து எங்கள விட்டுட்டு போய்டினம்" என வார்தையால் வர்ணிக்க முடியாத தன் வலியை கண்ணீராகி கலங்கினான்

புலம்பெயர்ந்த தமிழ்மக்கள் வாழ்வில் எக்காலம்சென்றாலும் நாட்டைபிரிந்தது, உறவுகளை பிரிந்தது, ஓய்வின்றிய வாழ்க்கை, பணத்தின்அழுத்தம், என்று வலிகள் சூழ்துகொண்டேதான் இருக்கின்றது அது ஆழ்மனங்களில் எரிமலைபோல் தேங்கிக்கிடக்கின்றது. அது ஒரு அறிந்தவன் ஆதரவுகிடைக்கும்போது உணர்வுகள் வார்த்தைகளை விழுங்கிவிட்டு வலிகள் கண்ணீராக வருவது ஒன்றும் புதியதல்ல.

"அழாத மச்சசான் அழாத என்ன இது சின்ன பிள்ளை மாதிரி வாழ்வின் அர்த்தம் விளங்காதவனா நீ? அழாத" என்று தன்கண்களும் கலங்க ஆறுதல் படுத்தினான்.

இமையனும் "சரிடா எல்லாம் எங்கள்தலைவிதி நாங்கள் பிறக்கேக்க எங்களுக்கு என்று ஒரு வீடு இருக்குமாபோல் ஒரு நாடு இருந்திருக்கவேண்டும் இல்லாட்டி இப்படிதான் வாழ்கை தெரு நாய்கள் மாதிரி வர்றவன் போறவன் எல்லாம் கல்லெறிந்து தான் பாப்பாங்கள் என்ன செய்யிறது " ஆத்திரமும் கவலையும் வாயடைக்க தன் கண்களை துடைத்துக்கொண்டு மனதை சற்று சாந்தப்படுத்த சனச்சத்தம் நிறைந்த கடை யில் இருவருக்கும் இடையில் ஒரு அமைதி.

காலத்தின் நிலையை எண்ணி கரைந்து கொண்டிருந்தது அவ் அமைதியை உடைக்க வாணன்

"சரி மச்சான் இங்க வந்து எவ்வளவு காலம் ஏனடா எனக்கு ஒரு தொடர்பும் எடுக்கல்ல என்னில என்னடா கோவம் " என இமையனை உரிமையோடு கேட்க "ஒரு கோவமும் இல்லமச்சி உன்ர தொடர்பு இலக்கம் எல்லாம் இடம்பெயர்வில துலைந்து போட்டுது.நானும் நிறையபேருட்ட கேட்டுப்பாத்தன் கிடைக்கல்லடா" என்று கூறிக்கொண்டே இருக்கும்போது

கடையின் சேவர் "அண்ணா இடியப்பம் ரெடி"

மேசையில் வைத்துவிட்டு "சொதியும் சம்பலும் போதுமே உழுந்து வடையொண்டும் பருப்பும் வைக்கட்டா இப்பதான் வட போட்டது சுடசுட இருக்கு" என்று தன் வியாபார உத்தியில் தன் பணிவான கவனிப்பை வெளிப்படுத்தினான் வாணனும் சற்று நக்கலாக " அண்ணா ஆசப்பர்றார் ரெண்டு பேருக்கும் ஒண்டொண்டு வையுங்கோவன்"

"சரிமச்சான் நீசொல்லடா உன்ர விசா என்னமாதிரி ஓக்கே தானே" "இல்ல மச்சான் ஒப்றாறியக்ட் பண்ணீட்டாங்கள் கொமிசனுக்கு போட்டிருக்கு"என்று சொல்லிக்கொண்டே இடியப்பத்தை குழைத்து வாய்குள் வைத்தான் என்னதான் புலம்பெயர்ந்து வெளிநாடு வந்தாலும் எங்களுடைய சாப்பாடுகள் கத்தி முள்ளுக்கறண்டி வைச்சு சாப்பிட முடியாத விடையம் .கையால பிசைந்து உறுட்டி சாப்பிடுவதே ஒரு தனிச்சுகம்தான்

குளிர் நாட்டுகளில் வாழ்பவர்கள் குளிருக்கு கையுறைபோடுவார்கள் அதனால் அவர்கள் அதைக்களட்டி சாப்பிடுவது கடினம் கத்தி கறண்டி கொண்டு சாப்பிடுவார்கள். அது குளிர்நாட்டில இருப்பவனுக்கு கலாச்சாரமாய் போய்விட்டது.அந்த பழக்கத்தை எம்மவர் ஏதோ உயர்குடிமக்களின் பழக்கம்போல் பின் பற்றுகிறார்கள் அவர்களுக்கு புரியவில்லை காலநிலை இருக்கும் சூழல் தான் நம் பழக்கங்களின் அடையாளமாக வெளிவரும் என்று.

வாணன் "ஏனடாப்பா உனக்கு நடந்த உண்மைப் பிரச்சனைய சொல்லீருக்கலாம் தானேடா விசா சும்மாகிடைச்சிருக்கும்" என்று இமையனைச் சற்று கடுமையான தொனியில் திட்டுவதுபோல்"சரி நீயா உன்ர கேஸ் எழுதினி அங்க போராளியா இருந்ததெல்லாத்தையும் சொல்லி இருக்கலாம் தானே" என்று வினாவிக்கொண்டே "அண்ணா சொதி கொஞ்சம் கொண்டு வாங்க" என்றான்

இமையன் "இல்லமச்சான் இங்க ஒரு கேஸ்காரனபிடிச்சுத்தான்

எழுதினான் அவன் சொல்லீட்டான் அங்க அமைப்புல இருந்த.தெண்டா விசாதரமாட்டாங்கள் உதவி செய்ததெண்டு மட்டும் சொல்லசொல்லி நான் அவனுட்ட சொன்னது என்னவோ அவன் எனக்கு எழுதித்தந்தது என்னவோ. அது பத்தாம முன்நூறு யூரோவையும் சுளையா பறிச்சுபோட்டாண்டா. என்று புலம்பிக்கொண்டே சொதி கொண்டு வந்த சேவரிடம் எனக்கும் கொண்டுவாங்கண்ண என்றான்.வாணன் சரிமச்சி விடு விடு உனக்கு யாரும் சொல்லிதர இல்லையா இந்த கேஸ்காரன்ட சுத்துமாத்து அவங்களுக்கு ஒரு இழவுச் சட்டதிட்டமம் ஒழுங்காதெரியாது சும்மா கதை எழுதிறமாதிரி எழுதவேண்டியதுதான்

எழுதிற கதைய தனித்தனிய எழுத மாட்டாங்கள் எல்லாருக்கும் ஒரே மாதிரிதான் எழுதுவாங்கள் பத்தாகுறைக்கு களவாப்ரு செய்து தாரன் என்று செல்லி ஊரிலஇருந்துவாற சனங்களுட்ட நல்லாக் காசுபுடுங்கவேண்டியதான்.என்று கேஸ்காரர் மீதிருந்த வாணனின் அதிர்ப்தியை வெளிப்படுத்தினான்


"என்ன செய்ய மச்சி எனக்கு இங்க யாரும் உதவி இல்லடா தெரிஞ்ச பெடியள் வீட்டதான் இருக்கிறன் அவங்களும் ஒரேவேலை என்னோட ஒரேவர முடியாது. இடத்த காட்டி விட்டாங்கள் நான் தான் விசாரிச்சு விசாரிச்சு எல்லாம் செய்தண்டா இங்க ஆயிரதெட்டு தமிழ் சங்கங்கள் இருக்கு ஒருத்தனும் உண்மைப் பிரச்சனையோட அகதியாவாரவனுக்கு ஒரு சின்ன உதவிசெய்யுறதில்ல அப்படியே நாங்கள்போய்கேட்டாலும் உன்ன எப்படி நம்புறது நீ CID யாகக்கூட இருக்கலாம் என்று ஒதுக்கித் தள்ளுரது என்ன செய்யமச்சி நாட்டுல எதுக்ககாக கஸ்ரப்பட்டோமோ அதுக்கு இங்க மதிப்பில்ல சுமா இங்கையும் அங்கையும் அரசியல் என்ற பேர்ல ஆக்கள ஆக்கள் முடிஞ்சு விட்டு நல்லா காசுபாக்கதான் இருக்கிறாங்கள் வம்புல பிறந்த கள்ள நாய்கள். என்று தன்கோபத்தையும் இங்குள்ள தமிழ் அமைப்புக்கள் மீதுள்ள பொறுப்பற்றதனத்தையும் வார்தையாக்கிக் கொட்டினான்"

அவன்கோபத்தின் உண்மை உணர்ந்த வாணன் தான் இருக்கும் கடை ஒரு தமிழ் அமைப்பில் பெரும் பொறுப்பில் இருப்பவருடையது என்பதுவும் அவர் இங்குள்ள தமிழ் இளைஞர்களை தன் சொந்த தேவைக்காக உசுப்பேத்தி அடியாட்கள் போல் பயன் படுத்துவதையும் வெளியட்கள் சொல்லக் கேள்விபட்டிருக்கிறான் அது போக ஒரு சில நேரங்களில் அவர் பெடியளோடு நின்று கதைப்பதையும் அவதானித்து இருந்தான் அதை உணர்ந்து

"மச்சி வாயக்கொஞ்சம் அடக்கடா சும்மா நீ உண்மைய கதைக்கபோக நாளைக்கு உன்ன ஆக்களவைச்சு அடிப்பாங்கள் அவங்களுக்கு என்ன தெரியும் குடுக்குற காசுக்கும் குடிக்கிற தண்ணிக்கும் எங்கட மண்டைய ஈவிரக்கம் இல்லாம பிளந்துட்டு போயிருவாங்கள் என்று இமையன் கோவத்தை கட்டுப்படுத்திகொண்டு சரி மச்சான் நீ ஒன்றுக்கும் யோசிக்காத கொமிசனுல நீ நடந்த உண்மை எல்லாதையும் தொளிவாசொல்லு கட்டாயம் உனக்கு விசாகிடைக்கும் என்று அவன் மனதை ஆறுதல் படுத்தினான்.

இமையன் நீ என்னடா செய்யிராய் அப்பா அம்மா தம்பி எல்லாரும் சுகமா என்று வினாவவே எல்லாரும் நல்லா இருக்கினம் நீ என்னோடவீட்டவா எல்லாரையும் பார்த்த மாதிரிஇருக்கும் என்று இமையனுக்கு அழைப்பு வைத்தான்.

**தம்பி வருவான்...**



# அபலை

–ரதி மோகன்
டென்மார்க்

கொடியராட்சத
கழுகொன்று
குத்துகரணமடித்து
காவு கொண்டது
அவளுக்கு உயிர்
கொடுத்தோர்
உயிர்தனை.

பொத்தி வைத்த
ஆசைகளெல்லாம்
அந்த நொடியில்
தவிடு பொடியாகிட.

பட்டுவர்ண
சிறகுகடித்து
பறந்து திரிந்த
தேன்சிட்டவள்
வண்ணம்
தொலைத்து
அனிச்சம்
மலராகினாள்.
வானவில்லின்
வர்ணங்களை
எழில் ஆடைகளாக்கி
கனவிலே சூடி
மகிழ்ந்தாள்.

கொட்டுமேளமும்
மலர்மாலையும்
மலர்மஞ்சமும்
பகற்கனவுகளாயின.

சிரித்து கொஞ்சிக்
குலாவி கைகோர்த்த
காதலர்கள்
கடந்து செல்கையில்
கலங்கியது
அவள் நெஞ்சம்.
கல்லறைநோக்கி
நடந்தன
காரிகையின்
கால்கள்.

நெஞ்சில்
சுமந்தவனை
தூக்கம் கலைத்து
எழுப்பி வந்து
ஏந்திழையாளின்
வாழ்வின்
கொடுமைதனை
எடுத்துரைக்க.

போர்மேகம்
விலகினாலும்
கார்மேகம்
சூழ்ந்த வாழ்வு
விடை காண முடியாத
விடுகதையாகிறது.

ச.பிரபவின்

# நவிகோவிற்கு ஈரோ 89:90

## பகுதி-1



இன்று 8:30 க்கு எழும்பலாம்.இல்ல 8:40 க்கு எழும்பலாம் என்று அவனது அலாரம் ஓசையை இல்லை இல்லை தொல்லையை சற்று தாமதமாக அலரச் செய்வதற்கான கால அவகாசத்தை வைத்து விட்டு கீழ்த்தள வீட்டிலுள்ள போர்வைக்குள் தன்னைப் புதைத்துக்கொண்டான் கீழ்த்தளம் என்பது வீடல்ல! பிரான்சு நாடு வல்லரசாக இருந்தாலும் தலைநகர் பரிஸில் வசிப்பதற்குத்தான் உலக நாட்டவர் அனைவரும் அவா கொள்வார்கள். தாயகத்திலிருந்து தன் உயிரைக் காப்பாற்றி வசதியான வாழ்க்கை வாழவந்த இவன் மட்டும் என்ன விதிவிலக்கா? இருந்தாலும் தலைநகரில் முதலாளிகள் வர்க்கம் மட்டுமே வாழ முடியும் என்கிறநிலையில் பணக்காரர்களே வலைவீசி பிடித்ததுபோன்று நிலங்களை பணத்தினால் அபகரித்து வசிக்கின்றனர். இவனோ தலைநகர் இல்லாவிட்டாலும் பரிசை அண்டிய பகுதி (ille de France) திரான்சி என்னும் கிராமத்தில் வசித்து வருபவன். அந்தக் கிராமத்தில்க் கூட தீப்பெட்டி வடிவிலான அவன் வீட்டில் இடப் பற்றாக்குறையினால் ஒரு கட்டிலுக்கு மேல் இன்னுமொரு கட்டில் என்கிற அடுக்குமாடி வடிவில் அமைந்த கட்டிலில் கீழ்க் கட்டிலில் தூங்குபவன். அதனால் மேல்த்தள வீட்டிலுள்ள நண்பனது குறட்டைச் சத்தத்தினால் இரவு முழுவதும் சமாளித்துவிட்டு விடிகாலை நான்கு மணிக்கு அயர்ந்தவன் 8:20 மணி தொல்லையை (அலாரம்) 8:40 மணி வரை சமாளித்துக் கொண்டவன் வேகமாக விறுவிறுப்புடன் வேலைத் தளத்திற்குச் செல்லத் தயாரானான். பிரெஞ்சு நாட்டவருக்கு விடுமுறை நாளான சனிக்கிழமை இவனுக்கோ தொல்லை நாளான ஐந்து நாள் வேலையின் கடைசி நாளான அன்று விடுமுறை நாள்தானே. இன்று தாமதமாகச் சென்றாலும் பரவாயில்லை என நினைத்தால் இவன் வசிக்கும் கிராம வழித்தடத்தில்ச் செல்லும் புகையிரத வண்டி. இல்லை இல்லை எமது ஊரில்த்தான் ரயில் வண்டிகள் புகையைக் கக்கிக்கொண்டு செல்வதனால் அப்படிச் சொல்லலாம். ஆனால் இந்த நாடுகள் மேலைத்தேயத்தில் வளர்ச்சியடைந்த நாடுகளல்லவா? அதனால் புகையைக் கக்கி முடிந்து மின்சாரத்தை விழுங்கும் வண்டிகள் வந்து பன்னெடுன்காலமாகிவிட்டிருந்தன. அதனால் மின்தொடர் வண்டி என்பதேசரியானதாக இருக்கும். அந்த மின்தொடர் வண்டியை நம்பமுடியாது எந்நாளும்! இது விமான நிலையத்திற்கும் தலைநகருக்குமான தொடர்புபடுத்து வண்டி. ஆகையால் அதில்ப் பணியாற்றுபவர்கள் தனியாராகையால் தமக்கு வேண்டியதைச் சாதிப்பதாக இருக்கும் பட்சத்தில் இந்த மின்தொடர் வண்டி வழித்தடத்தில்த்தான் தாமதம் செய்வதோ அல்லது பணி நிறுத்தம் (கிரேவ்) செய்து அரசாங்கத்திடம் தாம் நினைத்ததை முடிந்தளவு சாதிப்பார்கள். இது அவன் வேலைக்கு அந்த வண்டியில் செல்லும்போது அவன் போன்ற தமிழ் உறவுகள் பேசிக்கொள்வது! அவனும் இது உண்மைதான் போலிருக்கும் என பலதடவையும், இந்த தகவலெல்லாம் இவங்களுக்கு சொல்லிக்கொண்டுதான் அரசாங்கம் ஆட்சி நடத்துகின்றதா? என சில வேளைகளிலும் சலித்துக் கொண்டதுண்டு. இந்த வழித்தடத்தில் வரும் மின்தொடர் வண்டிக்கு RER ட என்று வேறு பெயர்! என்ன செய்வது? இதையும் தாண்டி வண்டியைப் பிடித்து வேலைக்குச் செல்வதானால் குறைந்தது 40 நிமிடங்கள் தேவைப்படும். இவற்றையெல்லாம் விடவும் பெரிய விடயம் இந்த மின்தொடர் வண்டிகளில்ப் பயணம் செய்வதற்குப் பதில் சிறைச்சாலைகளில் வலிகளை அனுபவித்து விடலாம் என எண்ணத்தோன்றும். அந்த அளவிற்குப் பாதுகாப்புஅதிகமாக இருக்கும். ஒன்று உயிர்ப் பாதுகாப்பு. இரண்டாவது பணப் பாதுகாப்பு. உண்மைதான் பிரான்சு நாட்டின் போக்குவரத்தை அந்நாட்டு அரசாங்கம் தனியாரிடம் ஒப்படைத்திருப்பதனால் தனியாரும் இரண்டு வழிகளில் பதில் சொல்லியாகவேண்டும். அதனால் அப்படி இருப்பது என்னவோ ஒருபுறம் நியாயமான-தாகவே காணப்படும். அதுமட்டுமல்ல இந்தநாட்டில் பணம் சம்பந்தமான எந்த விடயமாக இருந்தாலும் மிகவும்

கடினமான இறுக்கப்பாடுகளையே வகுத்துள்ளது பிரான்சு நாட்டு அரசு. இவற்றையெல்லாம் தன் எண்ண

அலைகளில் சலித்துக் கொண்டவனுக்கும் ஒரு உறுதியான காரணமும் உண்டு மின்தொடர் வண்டிப் போக்குவரத்தை சிறைச்சாலை என்று எண்ணுவதில்! அவன் பிரான்சு நாட்டிற்கு வந்து நான்கு வருடங்கள் உருண்டோடியும் அகதி அந்தஸ்து கிடைக்கப்பெறாதவன். அவன் பயப்படுவதில் சற்று உண்மையும் உள்ளது. பயணச்சீட்டு இல்லாதவர்களை காவல்த் துறையினரின் துணைகொண்டுதான் மின்தொடர் வண்டிப் பயணச்சீட்டுப் பரிசோதகர்கள் சோதனையிடுவார்கள். இவர்களும் தனியார் என்பதனால்.

வேகமாகப் புறப்பட்டவன் மார்களி மாதம் ஆரம்பிக்க இரண்டு நாட்களே இருப்பதனால் இருண்ட கண்டத்துக் குளிர் மனிதனின் எலும்புகளை இருட்டடிப்புச் செய்துவிடுமளவிற்கு இருக்கும். அதனால் இரண்டு சாதாரண ஆடைகளை அணிந்தவன் அவனின் அண்ணாவின் தொல்லையினால் குளிருக்காகத் தலையை மூடி அணியும் குளிருடை(ஜக்கெட்) வாங்கித் தரப்பட்டிருந்தாலும் அது வீட்டிலிருந்து சாலைக்குச் செல்லும் வரைதான் தாங்கும் அந்தப் பேச்சு. பின் தலையிலிருந்து இறங்கிவிடும். ஏனெனில் அவனுடைய தலைமுடி அழகு கலைந்துவிடும் என்கிற எண்ணம். எண்ணம் என்பதை விட அதுவும்தான் உண்மை! இந்தக்காலத்து பொடிப்பயலுகளுக்கு இயற்கையின் விளைவு, பாதிப்புகள் எந்த அளவிற்கு நன்மை பயக்குமோ அந்த அளவிற்கு கெடுதல் விளைவிக்குமென்பது தெரியவா

போகிறது? அதனோடு சேர்த்து கழுத்தைப் பாதுகாக்கும் நாயின் பட்டிபோன்ற துண்டையும் கழுத்தை இறுக்கி ஒரு முடிச்சுப் போட்டுவிட்டு கண்ணாடி முன் நின்று தனது வலது கையால் தலைமுடியை லேசாகத் தட்டிவிட்டு ஒரு பார்வை பார்த்தான். அந்தப் பார்வை கண்ணாடியில்த் தனக்குப் பின்புறம் தெரிந்த மேசையில் ஒரு செவ்வக வடிவ பிளாஸ்டிக் அட்டையில் வலது பக்கமாக எட்டு எண்களும் கீழே அந்த அட்டைக்குரியவரின் முழுப்பெயரும் நடுவில் புகைப்படமும் இளநீல நிறத்தில், இடது பக்கமாக கடும் ஊதா நிறத்தில் யேஏஜ என்பதை வெள்ளை நிறம் கொண்டும் புமு என்பதை இளம்பச்சை நிறம் கொண்டும் பிரெஞ்சு மொழிக்கே உரித்தான அழகில் யேஏஜபுமு என எழுதப்பட்ட அட்டை தென்படவே தலையில்க் கை வைத்துவிட்டு தன் ஜக்கெட் பையினுள் சந்தேகிப்பது போலவே கையை நுழைத்தான் மேசையில் இருப்பது என்னுடைய நவிகோதானா என்று. ஆம்! அது அவனுடையதுதான். அவன் சந்தேகித்ததன் நோக்கம் யாருக்கும் புரிந்திராது ஏனெனில் அண்ணன், தம்பி இருவரும் உருவ ஒற்றுமை யாரும் கண்டுபிடிக்கமுடியாத அளவிற்கு இருக்கும். அதனை எடுப்பதற்கு முன் கறுப்பு நிறப் பாதுகையின் நாடாக்களை குனிந்து இறுக்கினான். அந்த வளர்ப்பு நாய்க்குட்டிகள் இரண்டும் அவன் கால்களை லாவகமாகக் கவ்விக் கொண்டன. நாடாவை இறுக்கியத்துதான் தாமதம், இரண்டு வளர்ப்புக் குட்டிகளும் எமக்கு வேலை கொடுக்கும்படி தம் எஜமானிடம் பரிவுடன் கேட்டன. எஜமானும் அவை இரண்டையும் பார்த்துப் புன்னகைத்து தலை அசைத்து விட்டு நடப்பதற்கு வீட்டின் உள்ப்புறத்திலே ஒத்திகை பார்த்துக்கொண்டிருந்த வேளை குளியலறையிலிருந்து வந்த அண்ணாவிடம் நவிகோ ரீசார்ச் பண்ணனும் என்றான். அவர் எவ்வளவு? என கேட்க, நவிகோவிற்கு ஈரோ 89:90 என்றான். அவர் வழமையாக அவனுக்கு கொடுப்பதுதான், இருந்தாலும் அவர் எவ்வளவு என்றுகேட்டதற்கு காரணமும் உண்டு. போக்குவரத்துக் கட்டணத்தை பரிஸ் பகுதிக்குள் பரிஸ் போக்குவரத்து சுயேட்சை

நிறுவனமும் (RATP) பரிசை அண்டிய பகுதிகளுக்கு பிரெஞ்சு ரயில்வே தேசிய நிறுவனமும் (SNCF) என்னும் தனியார் நிறுவனம் மாதம் ஒருமுறை கட்டணத்தை உயர்த்திய காலம். ஏனவே அவர் கேட்டதில்த் தவறில்லை. பணத்தைக் கொடுப்பதற்குப் பதில் அவர் கார்டு ப்ளூ அட்டையை கொடுத்தார். அவனும் அதை வாங்கிக்கொண்டு அதன் இரகசிய இலக்கம் அவனுக்குத் தெரிந்ததினால்

வேகமாக வீட்டை விட்டு வெளியேறி சாலையில் நடந்தான் மின்தொடர் வண்டி நிலையத்தை நோக்கி. ஆறு நிமிடங்கள் கரைந்தோடவும் மின்தொடர்வண்டி நிலையத்தில் வந்து பயணச்சீட்டுப் பெறுமிடம் இயந்திரமயமாக்கப் பட்டிருந்தாலும், அவன் போன்ற சக பணியாளர் இருந்த இடத்தில் வரிசைக் கிரமமாக 7,8 பேர் காத்திருந்தனர். தானும் அதில் இணைந்துகொண்டு அங்கு இணைத்திருந்த தொலைக்காட்சியில் நேரத்தைப் பார்த்தான். 09:05

சுமுடிளைழெ என்னும் கிராமத்திற்குச் செல்லும் வண்டி என்று துள்ளியபடி தனது வருகையைத் தெரிவித்தது. இந்த வண்டியைப் பிடிக்க ஏலாது அடுத்தது 09:20 இற்கு Massy-palaiseau அதைப் பிடித்துவிடலாம் என்று மனதில் எண்ணிக்கொண்டு முன்பக்கம் திரும்பவும், மொசு மிஸ்யூ! மொசு மேடம், என்றவன் தனக்குத் தெரிந்த பிரெஞ்சு மொழி அரைகுறையாக இருந்தாலும்

Bonjour> je voudrais recharger ma carte navigo pour le mois prochain s'il vous plaît.

Oui monsieur> bien sûr.

Votre carte est abîmée il faut faire une demande pour avoir une nouvelle carte.

Où puis-je la récupérer.

Vous pouvez la récupérer à la Gare du Nord.


Merci> bonne journée

என்று அந்த செக்கச் சிவந்த தொப்பியையும், ஊதாவும் வெண்மையும் கலந்த மெல்லிய நீள் கோடுகளையுடைய மேல்ச் சட்டையும் அதற்கு இணையான நிறத்தில் கீழங்கியும் அணிந்து மேலைத்தேய வெண்பொம்மையை மெருகூட்டியிருந்த,

முப்பத்தைந்து வயது மதிக்கத்தக்க பெண்மணி மழலைச் சிரிப்புடன் அவனுக்கு அறிவுரையை அள்ளி வழங்க பதிலுக்கு இவனும் வண்டியின் வருகையை அறிந்து

அவசரப்படுத்தி நவிகோவையும். பற்றுச்சீட்டுகள் இரண்டினையும் பெற்றவன் வேகமாக ஓட மீண்டும் புன்சிரிப்புடன் அந்த வெண்பொம்மை அவனுக்கு உதவுவதற்காக நிலையத்தில் எந்திர மயமாக்கப்பட்ட நுழைவாயிலைத் திறந்து விட்டாள். அதற்கு அவன் கையை அசைத்து நன்றி தெரிவித்துவிட்டு சிட்டாகப் பறந்து வண்டியில் ஏறினான். இருபது நிமிடங்கள் கரைந்தோட அவன் மாற்று மின்தொடர் வண்டி பரிஸ் நகரைச் சுற்றி வலம்வரும் மெட்ரோவில் காலதாமதமின்றி ஏறிச்சென்றவனுக்கு மனப்பயம் உறுத்தியது. நவிகோ ரீசார்ச் செய்திருந்தாலும் அது பழுதடைந்து விட்டதனால் போகும் வழியில். அந்த வழித்தடத்திலுள்ள ஒரு மெட்ரோ நிலையத்தில் நவிகோ வினை மாற்றிக்கொண்டு சென்றான். மாற்றிய நவிகோவினை தன் வலது

கையில் வாங்கியவன் சற்றே கண்கள் விரியப் பார்த்தான். புதிய நவிகோவினை சுயுவீ யினர் மக்களை கவர்வதற்காகவோ அல்லது வேறு காரணத்தினாலோ அதன் வண்ணங்களையும் பக்கவாட்டில் இருந்த புகைப்படதினை நீளவாட்டிற்கு மாற்றியிருந்தனர். முன் பக்கம் நீளவாக்காக இரு பாதியாகப் பிரிக்கபட்டு வலது பக்கம் மேலே மனித நரம்புகள் ஓடிய செப்புத்தகடும் சற்றுக் கீழே STIகு எனும் சின்னமும் கீழே அவனது பழைய புகைப்படமும் அந்த வைலற் நிறத்தில் அவன் கண்ணை வருடின. கூடவே இடது புறம் பிரிக்கப்பட்ட பாதி ஊதா நிறம் என்பதனாலும் கறுப்பு நிறத்தில் அவனது பெயரும். நவிகோ இலக்கமும் பதிக்கப்பட்டிருந்ததினால் கடுமையான அந்த ஊதா நிறம் அவனைச் சுண்டியிழுக்கவே பாட்டி வடைசுடும் கதை கேட்டு அந்த நிலவே கையில் கிடத்த மகிழ்ச்சியில் புதிய நவிகோவினை அதன் பாதுகாப்புக் கண்ணாடிக் கவருக்குள் சுறுசுறுப்பாக உள் நுழைத்து விறுவிறுப்பானான் வேலைத்தளத்திற்குச் செல்ல!...




**அங்கோலாவின் கடைசி அரசியான நிசிங்காவின் வரலாற்றைக் கூறும் திரைப்படம் வெளியாகியுள்ளது. ஆப்பிரிக்காவிலும் நாகரிகமடைந்த நாடுகளும், அங்கே மன்னராட்சிகளும் இருந்துள்ளன. ஐரோப்பிய காலனியாதிக்க ஆக்கிரமிப்புக்கு எதிராக பெரும் போர்கள் நடந்துள்ளன. ஐரோப்பியரால் வேண்டுமென்றே இருட்டடிப்பு செய்யப்பட்ட ஆப்பிரிக்க வரலாறு. தற்போது மெல்ல மெல்ல வெளிவருகின்றது.**



**புகைத்தல் பொருட்களை விற்கும் பன்னாட்டு நிறுவனங்கள் தமது பலமான பொருளாதார ஸ்தானத்தை வைத்து சிறிய, வறிய நாடுகளின் சட்டங்களை விலைக்கு வாங்குவதைக் கவனித்துக் கோபமடைந்த இரண்டு உலகப் பெரும்புள்ளிகள் அந்த நிறுவனங்களுக்கு எதிராகக் களத்தில் இறங்குகிறார்கள்.**

**தமது பணத்திலிருந்து ஒரு தொகையை ஒதுக்கி அந்த நாடுகள் புகைத்தல் பொருட்கள் உற்பத்தி செய்யும் நிறுவனங்களுக்கு எதிரான வழக்குகளில் தேசிய நன்மைக்காகப்**

**போராட உதவிசெய்யவிருக்கிறார்கள்.**

**ஒருவர் மைக்கல் புளூம்பெர்க் மற்றவர் பில் கேட்ஸ்!**

# அஞ்சரனின்

நாம் இருக்கும் நாட்டில் அதாவது ஐரோப்பாவில் பெரும்பாலும் அதிகமா எல்லோரும் பாவிக்கும் சொல் ,தேசியம் ,மண்பற்று ,மக்கள் சேவை ,பொது தொண்டு ,ப்படி ஒரு பட்டியல் நீளும் அதுபற்றி எந்த ஆட்சேபனையும் ,ல்லை. எனக்கு ஏற்படும் ஆதங்கம் சிலவேளைகளில் உங்களுக்கும் தோன்றலாம் அல்லது அந்த நிலமைகள் வந்து போகலாம் ஒரு நொடி ..

இங்கு எல்லா இனங்களிலும் ஒரு செயற்பாடு நான் கவனித்து இருக்கிறேன் ,அது யாதெனில் அகதியா குடிபெயர்ந்து

ஒருவரோ அல்லது ஒரு குடும்பமோ வந்தால் அந்த இனம் சார்ந்த ஒரு அமைப்பு இருக்கு அவர்களிடம் முதலில் போவார்கள் ,அவர்கள் இவர்களுக்கு இப்ப என்ன தேவை என்றும் என்ன என்ன உடனடி அவசியங்கள் என்றும் ஆராய்ந்து அதுக்கான செயலில் இறங்கி முதல் கட்ட உதவிகள் செய்து ,பின்னர் இந்த நாட்டில் சட்டப்படி தங்க என்ன செய்யவேண்டும் என்று அதுக்கான ஆலோசனைகள் வழங்கி தங்கள் மொழி தெரிந்த மொழியை படித்த ஒருவரை அவருடன் அனுப்பி ,சில வேலைகளை செய்து கொடுத்து ஒரு ஆறுமாதமாவது உதவியாக இருப்பார் ..

ஆனால் தமிழர்கள் மட்டும் ஒரு நாட்டில் ஆளுக்கு ஒரு சங்கம் ...ஒன்றியம் ..குழு ..கிராம அபிவிருத்து சேவைகள் என்று பல நிறுவனங்கள் இயங்கும் ஒரு உதவி கேட்டு போனால் அது தம்பி ஊருக்கு மட்டும்தான் செய்வம் இங்க உள்ளவைக்கு செய்யவதில்லை ,சரி அப்புறம் எதுக்கு இங்க உள்ளவர்களிடம் மட்டும் உதவி கேட்டு போகிறார்கள் என்றுதான் தெரிவதில்லை ...

ஒரு முறை நண்பர் ஒருவர் கேட்டார் வந்த புதிதில் இந்த வீசா போடும் போம்(படிவம்) நிரப்பவேணும்

கையில காசு இல்லை ஒரு இரண்டுநாள் கழிந்து கொடுக்கலாம் இந்த போமை நிரப்பி வேண்டும் என்று சரி நானும் ஒரு பிரபல தேசியம் பேசுபவர் மக்களுக்காகத் தான் வாழ்வதா கூறும்

ஒருவரிடம் கூட்டி போனேன் “அண்ணே காசு இப்ப இல்லை இந்த போமை நிரப்பி தாங்கோ ஒரு நாள் கழிந்து காசு கொண்டுவந்து தாரன் என்று' ,அதுக்கு அவர் சொன்ன பதில் “

“என்னடா தம்பி இருபது லட்சம் செலவு பண்ணி இங்க வந்திட்டு இருபது யூரோ இல்லாமல் இருக்கிறாய்'என்பதே. அந்த இருபது லட்சம் என்பது பலரின் உதவி என்று அவருக்கு தெரிந்திருக்க வாய்ப்பு இல்லை காசு இல்லாட்டி இருக்கும்போது வாரும் நிரப்பி தாரன் என்று சொன்னார் .ஓகே பின்னர் முன்னம் ஒரு அண்ணை நிரப்பின போமை பார்த்து நாங்களே நிரப்பினோம் அதில் கேட்டு இருப்பது அப்பா பெயர் ...முகவரி ..அவரின் பெயர் இதை

எழுதி கொடுக்க அவருக்கு இருபது யூரோ இதில் அவர் தேசியத்துக்கு செயல்படும் பெரிய ஆளு வேற வெட்கமான விடையம் வந்தவனுக்கு உதவி பண்ணுவது கூட பணம் தீர்மானிக்கும் இடத்தில் ,எதுக்கு இந்த ஆளுக்கு ஊருக்கு ஒரு சங்கம் வைத்து இருக்கிறாக்கள் என்றுதான் புரியவில்லை .அதாவது வேறு இனத்தவர் போல



# சவகர்கள் ..!

எம் இனமும் ஒருவர் அகதியா வந்தால் அவருக்கு ஒரு ஆறுமாதம் ஆவது உதவியா இருக்கலாம் சாப்பாடு கொடுக்க தேவையில்லை இங்கு என்ன செய்ய வேணும் எப்படி ஒவ் ஒவ்வொரு விடையங்களையும் அணுகவேண்டும் என்றாவது ஒரு பொதுவான இடத்தில் கிழமைக்கு ஒருதடவை ,அல்லது இரண்டு கிழமைக்கு ஒருதடவை் ஒரு இடத்தில் கூடி சந்தித்து அவர்களின் தேவைகளை சேவை செய்ய ஆர்வம் உள்ளவர்களை ஒன்றிணைத்து செய்து கொடுக்க முனைவது இல்லை ஏன் ,ஒரு சாதாரண படிவங்களை நிரப்ப கூட பக்கத்துக்கு இவ்வளவு தா என்று காசு வாங்குவதில் உள்ள நோக்கம் ஒருவனுக்கு சிறு உதவி செய்து கொடுப்பதில் இருப்பதில்லை ...

பல அமைப்புக்கள் உள்ள இடத்தில் எந்த அமைப்பும் தங்களுக்கு இலாபம் இல்லாத எந்த வேலையும் செய்வதில்லை ,சின்ன சின்ன விஷ யங்களுக்கு கூட எம்மவர்கள் கடைகடையா ஏறி இறங்கி த்திரிவது இன்னும் தொடர்

கதையா இருக்கின்றது ஒரு தலைமுறை இங்கு படித்து ஒரு நிலைக்கு வந்தபின் கூட இந்த அவலம் தொடர்கின்றது ,ஒருவரிடம் போனால் அவர் தம்பி நான் மொழிபெயர்ப்பு மட்டுமே செய்வேன் கடிதம் எல்லாம் எழுதி கொடுப்பது இல்லை என்பார் ,அடுத்தவரிடம் போனால் அவர் கடிதம் என்ன என்று கேட்க முதலே முப்பது யூரோவை முற்ப்பணம் கட்டி விட்டு நாளைக்கு வாரும் என்பார் ,சரி அங்கால போனால் அலுவல் சொல்லமுதலே தம்பி இரண்டு நாள் எந்தவேலையும் எடுப்பதா இல்லை நான் ரொம்ப பிசி என்பார் .

இவ்வாறு எம்மினத்தில் மட்டுமே அலைக்கழிக்கும் செயல் இருக்கின்றது போல் எண்ணத்தோன்றும் இதற்கான நிவர்த்தியை இந்த சுமூகத்துக்கு எதாவது செய்யணும், செய்கிறம் என்று மார்பு தட்டி நிப்பவர்கள் கூடி ஒரு முடிவு எடுத்து சிறு ஆலோசனைகள் வழங்க வாவது உதவ வேண்டும் பல நாள் இல்லாவிட்டாலும் புதிதா வரும் ஒரு அகதி குடிமகனுக்கு ஆறுமாதம் ஆவது இலவசமா சில வேலைகளை செய்து கொடுக்க முயற்ச்சி செய்ய வேண்டும் .

அதுக்கு நீங்கள் ஊருக்கு செய்கிறம் என்று சேர்க்கும் காசிலாவது செலவு செய்து உதவி புரிந்தால் வருபவர் நாளை நல்ல நிலைக்கு வரும் போது உங்களுக்கு அதை விட பல மடங்கு உதவி மன மகிழ்வோடு அவராக முன்வந்து செய்வார் என்பதை எதிர் பார்க்கலாம் .

அதவிடுத்து யூதனை பாருங்கள் ,ஆபிரிக்க நாட்டவனை பாருங்கள்,சீனுவாவை பாருங்கள் என்று ஒற்றுமைக்கு வகுப்பு எடுக்காமல் நாங்களும் செயலில்இறங்கவேண்டும்.

### முதலாவது இலைதுளிர்கால நாள்

(March -20-2015)

பூமி தன்னைத்தானே சுற்றும் அச்சிலிருக்கும் சிறிய சரிவுதான் வடதுருவத்தின் நாலு கால மாறுதல்களைக் கொடுக்கிறது. விஞ்ஞானிகளின் கணிப்பின்படி அந்த அச்சரிவில் ஏற்படும் மிகச்சிறிய மாறுதல்களால் வடதுருவத்தின் இலைதுளிர்காலத்தை 30 செக்கண்டுகளால் குறைக்கிறது.

விளைவாக வருடாவருடம் கோடைகாலம் 30 செக்கண்டுகளால் அதிகரிக்கிறது. இக்கதியில் போ-னார் 8680 ம் ஆண்டில் இலைதுளிர்காலம் முழுவதும் கோடையால் கைப்பற்றப்பட்டுவிடும்.

தொகுப்பு- நி.வனஜன்





**யாழ்.தர்மினி பத்மநாதனின்**
**விபச்சாரி 80 ரூபாய்**

போர்க்காலத்தின் பின் ஒரு பெண் போராளி எவ்வாறு தன்வாழ்வியலில் வாழப் போராடுகின்றாள் என்பதும், 80 ரூபாய் கூவாகம் திரு நங்கைகள் திருவிழாவில் திருநங்கைகள் எவ்வாறு பயன்படுத்தப் படுகின்றனர் என்பது, ஒரே தளத்தில் உள்ளதால் இருகதைகள் ஒரு நூலின் பெயராக உள்ளது .

ஏனைய கதைகளும் ஈழத்தின் துயர் சுமந்த வலிகள் கொண்டவை. அவை ஈழத்திலும், ஈழத்தவர்கள் புலம்பெயர் மற்றும் தமிழ் நாட்டில் எவ்வாறு அனுபவிக்கின்றனர் என்பது பற்றியும் சொல்கின்றது .இங்கு விபச்சாரி , 80 ரூபாய் , வாடகை வீடு , வித்தகி , பட்டாம் பூச்சி , தந்தையின் தாலாட்டு, முக்கோணத் தலை நரகங்கள் . என 7 கதைகள் உள்ளன,

# தொகுப்பு- நி.வனஜன்




ஆசிரியர் - ந மாலதி

விடுதலைப்புலிகளின் நடை முறை அரசின் இறுதி நான்கு வருடங்களில் அந்த அமைப்பினில் உள்ள ஒரு நிர்வாகத்தினில் பணிபுரிந்த தனது அனுபவத்தினை பகிர்ந்திருக்கிறார்

இதில் விடுதலைப்புலிகளின் ஆட்சியில் இடம்பெற்ற நன்மை மக்களின் வாழ்க்கை முறைகள் புலிகளின் அரசின் கீழ் இருந்து இயங்கிய பிரிவுகள் மக்கள் சேவைக்காக புலிகளினால் உருவாக்க பட்ட அமைப்புகள் போராளிகள் பாரமரிப்புக்கான பிரிவுகள் மாவீரர் குடும்பங்களுக்கான கவனிப்புகள் பெண் போராளிகளுக்கான தேவைகள் கவனிப்புகள் அதுமட்டுமல்லாது சிறுவர் போராளிகள் என்று அறியப்பட்டவர்களை விடுதலை செய்வது அவர்களின் மறு வாழ்வுக்கு உதவுதல் என்று பல விடயங்களை ஆராய்ந்து பதிவு செய்திருக்கிறார்

ஆசிரியர் மாலதி வன்னியில் இருந்த வேளை தான் விடுதலைப்புலிகளின் நிசோர் என்ற அமைப்பு அதவாது வடக்கிகு கிழக்கு மனித உரிமை செயலகம் என்று கிளி பாதர் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டது பற்றியும் விரிவாக பதியப்பட்டிருக்கின்றது கிளி பாதர் என்று சொல்லும் கருணாரட்ணம் அடிகளார் இவர் தான் நிசூர் அமைப்பின் அத்திவாரமாகா இருந்தவர். எந்த விதத்திலும் யாருக்கும் சமரசம் செய்யாமல் நடு நிலையாக தனது சேவையை மக்களுக்கு செய்திருப்பதாக குறிப்பிடப்பட்டிருகின்றது. அது மட்டுமல்லாது பெண் விடுதலை. சிறுவர் போராளிகளின் விடுதலை வன்னி சமூக கட்டமைப்புக்கள் அங்கிருந்த ஊடகம் என்று அதிக வியங்கள் இந்த நூலில் ஆவணமாக்க பட்டிருக்கின்றது. வன்னி மண்ணில் இருந்த வேளை இவரின் முக்கிய ஆவணப்படுத்தலில் தமிழ் மக்கள் மீது ஏவிவிடப்பட்ட சிங்கள அரசின் இனப்படுகொலைபற்றிய தொகுப்பு இதே நேரம் இந்திய அரசின் இராணுவத்தினால் தமிழ் மக்கள் தமிழ் மக்கள் மீது நடத்தப்பட்ட பட்ட படு கொலைகளை ஆவணப்படுத்தியிருக்கிறார். இதனை ஒரு புலம் பெயர் நாட்டில் வெளியிடுவதாக முயற்சி செய்திருக்கிறார். ஆனால் அந்த ஆவணம் விடுதலைப்புலிகளால் தடை செய்யப்பட்டிருப்பதாக கூறப்பட்டிருகின்றது காரணம் அப்போதைய நேரத்தில் இந்திய அரசுக்கு எதிராக எந்த ஒரு பதிவையும் வெளியிட வேண்டாம் என்று புலிகளால் கூறப்பட்டிருந்தது என்பதாக இன் நூலில் பதிவு செய்திருக்கிறார் அதே நேரம் வன்னியில் முல்லை தீவு மாவட்டத்தில் 1985ம் ஆண்டு நடை பெற்ற பிரமந்தனாறு படு கொலை பற்றிய சிறு குறிப்புகளும் பதியப்பட்டிருக்கின்றது அதில் வெளிநாட்டு நபர் ஒருவரும் சம்பந்தபட்டதாக சாட்சியமும் பதியபட்டிருக்கின்றது அதாவது ஒரு சாட்சியின் பதிவில் "வந்தவர் ஒருவர் வெள்ளையர் நடப்பவற்றை எல்லாம் கவனமாக அவதானித்து கொண்டிருந்தார் அன்று எங்கள் கிராமத்திலிருந்து பலர் அவரை கண்டிருக்கிறார்கள் எமது கிராமத்தவர் அவரை மொசாட் என அழைத்தார்கள் அதன் அர்த்தம் அப்போது எனக்கு தெரியவில்லை பின்னரே அது வெளிநாட்டு வெள்ளையரை குறிக்கும் சொல் என்று அறிந்து கொண்டேன் " இவ்வாறு ஒரு சாட்சியின் குரல் பதியப்பட்டிருக்கின்றது அதே போல் போரின் இறுதி நாட்களில் நடை பெற்ற சிங்கள அரசினால் நடாத்தப்பட்ட இன அழிப்பு பற்றிய தனது நேரடி அனுபவம் அதாவது இறுதியில் முள்ளி வாய்க்கால் வாயிலாக வெளியேறிய வரைக்கும் தனது சாட்சியங்களை போரின் வடுக்களை ஆழமாக பதிவு செய்திருக்கிறார்

மொத்தமாக இந்த நூல் தமிழீழ அரசின் ஒரு சாட்சியமே



# அவள் செத்து விட்டாள்

**யோ.புரட்சி**

நீ…
இருக்கின்றாயா..?
இல்லையா..?
என்கின்ற கேள்விக்கு
பத்திரிகை பதிலளிக்கிறது.

யுத்தம்
உன்னை மட்டுமல்ல
உந்தன்
புகைப்படங்களையும்
பொசுக்கியிருக்கிறது என்பதற்கு
நினைவுப்படத்திற்குப் பதிலாய்
நிறுத்தப்பட்ட
ரோஜாப்பூ சாட்சியாகிறது.

உதித்த
உன் திகதியை
பதித்திருக்கும் பத்திரிகை
உதிர்ந்த
உன் திகதியை
உருவேற்றவில்லையே.....

நீ…
இருக்கின்றாயா..?
இல்லையா..?
என்கின்ற கேள்விக்கு
பத்திரிகை பதிலளிக்கிறது.

யுத்தம்
உன்னை மட்டுமல்ல
உந்தன்
புகைப்படங்களையும்
பொசுக்கியிருக்கிறது என்பதற்கு
நினைவுப்படத்திற்குப் பதிலாய்
நிறுத்தப்பட்ட
ரோஜாப்பூ சாட்சியாகிறது.

உதித்த
உன் திகதியை
பதித்திருக்கும் பத்திரிகை
உதிர்ந்த
உன் திகதியை
உருவேற்றவில்லையே.....

எனக்குத் தெரியும்
ஒருவருக்கும் தெரிந்திராது
உன்.. உயிர்போன நேரம்.

காயப்பட்ட பின்னர் நீ
கைவிடப்பட்ட
கன்னி ஆகினாய்.
தனிமையில் இருந்தவுனை
காப்பாற்றி மருந்திட
கடவுள் கூட
இடம் வந்திரார்.

உறவுகள் கூட
உன்னருகிலா
இரவு ஒன்றில் உன்
இன்னுயிர் கரைந்ததாம்.

பகற்பொழுது
பர்த்தபோது
இலையான்களுக்கு
இரையாகி இருந்தாயாம்.
இப்படித்தான் சொன்னார்
இறுதியாய் உன் நிலையை
இரு விழியால் கண்டவர்.

# கலையும் வாழ்வும்



## மன்மதன் பாஸ்கியுடன் ப.பார்த்தீபன்

**வணக்கம் ஈழத்து  உங்கள் பிரவேசம் பற்றி உங்கள் ரசிகர்களுக்கு அறியத் தாருங்கள். ?**

வணக்கம்! எனது சினிமா உட்பிரவேசம் என்பது படலைக்குப் படலை ஊடாகவே நிகழ்ந்தது தொடர்ந்து அதன் மூலம் கிடைத்த அனுபவங்கள் என்னை குறும் திரைக்கு இயக்குணராகவும்

நடிகனாகவும் விரிவு படுத்தியது.எனது ஆரம்ப 2006 நான் இயக்கிய நதி குறும்படம் நல்லூர்ஸ்தான் விருது விழாவில் எதிர் பாராத வெற்றியை தந்தது.அதன் மூலம் கிடைக்கப்பெற்ற அனுபவங்கள் தொர்ந்து என்னை மெருகேற்றியது. இதனால் என் நண்பர்களின் படங்களிலும் நடிக்கும் வாய்ப்பு கிட்டியது.

**நீங்கள் ஈழத்து சினிமாவிற்கு வந்த காலத்திற்கும் தற்போதைக்குமான காலப்பகுதியில் எவ்வாறான வளர்ச்சியை கண்டுள்ளது ?**

ஈழத்து சினிமா இப்பொழுதுதான் ஆரப்பித்திருப்பதாக நான் நினைக்கிறேன்.அதன்

தொடர்ச்சியாக எமது பண்பாட்டுத் தன்மையேடு இனைய வெளியில் வரும் பாடல்கள் குறும்படங்கள் முழுநீளத்திரைப்படங்கள் போன்றவற்றை குறிப்பிடலாம்.இது எமது சினிமாவின் வளர்ச்சிக்கு ஆரோக்கியமானதும் மகிழ்வானதும் என்றே கூறவேண்டும் ஆனாலும் முழுமையான திருப்தி தருவதாக நான் உணரவில்லை

**ஈழத்து சினைமாவை ஈழமக்களேபுறக்கணிக்கின்றார்கள் என்பது எல்லா ஈழத்து கலைஞர்களின் குற்றச்சாட்டு அது பற்றி உங்கள் கருத்து ?**

உண்மைதான் நான் உட்பட எம்மவர்களின் திரை ரசனை நூற்றாண்டைக்கடந்த தென்னிந்திய சினிமாவிலேயே உள்ளது. அதற்கு காரணம் அவர்களின பின்னணித் திரைமொழிபயன்பாடு எம் இரசிகர்களுக்கு பழக்கப்பட்ட ஒன்றாகப் போய்விட்டது அத்துடன் எம்மவர்களின் படைப்புக்கள் வரும் விகிதா சாரத்திலும் பார்க்க அவர்கள் படைப்புக்கள் நாளாந்தம் வந்து கொண்டே இருக்கின்றது. இருந்தாலும் சமகாலத்தில் வெளிவந்து சங்காய்வரை சென்று பல விருதுகளை வென்ற gun and ring திரைப்படத்திற்கு கூட சரியான வரவேற்பை தரவிலை என்பது மனவேதனைக்குரிய விடையம். ஆனாலும் எம்படைப்புக்களை எம்மவர்கள்தான் பார்த்து எம் கலைஞர்களை வளர்த்து விட வேண்டும் என்பது என் அவாவும் அன்பு இரசிகர்களுக்குமான என் வேண்டுகோளும் கூட.

**எம் கலைஞர்களுக்கும் தமிழ்நாட்டு கலைஞர்களுக்குமான உறவு நிலை எவ்வாறு உள்ளது ?**

நீடித்த உறவு நிலை உள்ளது. அவர்களும் நாங்களும் சேர்ந்து வேலை செய்தும் இருக்கின்றோம் ஆனாலும் ஆழ் மனங்களில் ஒரு பிரிவினை இருக்கின்றது. தமிழ்நாட்டு சினிமா தான் எமக்கும் உந்து சக்தியாக உள்ளது அகவே தொடர்ந்து சேர்ந்து பணிபுரிவதனுடாக ஈழசினிமாவில் ஒரு வளர்ச்சியை எட்டலாம்

**தமிழ் நாட்டு சினிமாவில் நடிக்க சந்தர்ப்பம் கிடைத்தால் நீங்கள் என்ன முடிவு எடுப்பீர்கள் ?**

ஒரு கலைஞனாக எனக்குரிய கதாபாத்திரம் கிடைத்தால் நான் சென்று நடிப்போன் கடந்த காலங்களில் அவ்வாறான சந்தர்ப்பம் கிடைத்தது ஆனாலும் சில தவிர்க முடியாத காரணங்களால் என்னால் செல்லமுடியாமல் போய்விட்டது.

**அண்மைக்காலங்களில் ஈழத்து முதலீட்டாளர்கள் ஈழத்துசினிமாவைப் புறந்தள்ளி இந்திய சினிமாவில் முதலீடு செய்வதை எவ்வாறு பாக்கின்றீர்கள் ?**

இதை இரண்டு விதமாகப்பார்க்கலாம் ஒன்று இலாபநோக்கம் இவர்கள் தங்கள் பணத்தை அவர்களுக்காக முதலீடு செய்கிறார்கள் இரண்டு தனக்கான புகழை பெற தங்கள் பணத்தை தங்களுக்காக முதலீடு செய்கிறார்கள் அங்கு ஏமாற்றமும் அடைந்து எல்லாம் இழந்து பின் இங்கு திரும்புகிறார்கள் இதுசாரந்த ஒரு கதையே அண்மையில் வெளிவந்த எனது நான் நடிகனாகப்போகிறேன் என்ற குறும்படம்.அதை தெளிவாக காட்டு கின்றது

ஆனாலும் ஒரு சிலர் தவறாகப்புரிந்து நான் முழுமையாக தமிழ்நாட்டுத்திரைக்கு போகவேண்டாம் என்பதுபோல் விளங்கிவிட்டார்கள் அதுஅவ்வாறு இல்லை இங்குங்கும் படங்கள் எடுக்கூடிய திறமையானவர்களும் வந்து விட்டார்கள் என்பதை நினைவு படுத்துகிறேன்.

**நீங்கள் ஒரு நடிகனாக இயக்குராக கதையாசிரியனாக என பல பரிமாணங்களில் திரைத்துரையில் இருக்கின்றீர்கள் அவை பற்றிய அனுபவங்களை அறியத்தாருங்கள் ?**

நான் நடிகனாகினது ரிரிஎன் தொலைக்காட்சியில் இடம்பெற்ற “படலைக்கு படலை” தொடர் மூலம் என்று குறிப்பிடலாம் அது தான் என்னுடைய ஆரம்பமும் கூட அத்துடன் நானே இயக்கி நானே நடிப்பதற்கு காரணம் என்னுடைய கதைக்கு ஏற்ற கதாபாத்திரத்துடன் ஒத்து போக கூடிய நடிகனை தேடி பிடிப்பது என்பது கஷ்டமான விடயமாக இருந்தது அப்படி இருந்தும் ஒருவர் இரண்டு பேர் வார்கள் இரண்டு மூன்று காட்சிகளில் நடித்து விட்டு முழுமையடைய முதல் ஆட்கள் காணாமல் போய்டுவார்கள் பின்னர் அவர்களைத் தேடி பிடித்து படத்தை முடிக்க முதல் காலங்கள் ஓடிச் சென்று விடும் அதனால் தான் நானே எனது படைப்புக்களில் நடிகனாகினேன் அப்படி இருந்தும் ஒரு சிலர் முழுமையான ஒத்துழைப்பு கொடுத்து நடித்து முடித்து கொடுத்த படங்கள் தான் ‘தூங்கா நகரம்.செல்வன்” போன்றவற்றை குறிப்பிடலாம்

அதே வேளை நான் ஒரு நடிகானாக எனது நண்பர்கள் சதா பிரணவன்.ஜபி ஜனா. ரமணன். சங்கர் போன்றவர்களின் படங்களிலும் நடித்திருக்கிறேன் இயக்குனர் என்று சொல்லும் போது பொழுது போக்காக மட்டுமல்லாமல் சமூகத்துடன் சேர்ந்த சமூகத்துக்கு தேவையான கதைகளுக்கே முக்கியத்துவம் கொடுத்திருக்கிறேன் இனி வரும் காலங்களில் வித்தியாசமான பொழுது போக்குடன் கூடிய மக்களின் விருப்பத்திற்கு ஏற்ற மாதிரியான படைப்புக்களை கொடுக்க முடியும் என்று நம்புகிறேன்.

**ஈழத்து சினிமாவில் பெண் நடிகைகள் என்பது பெரிய வெளியாகவே இருக்கிறது அதற்கு காரணம் என்ன ? இந்த சினிமா துறையில் பெண்களுக்கான இட ஒதுக்கீடு எப்படி இருக்கிறது இனி வரும் காலங்களில் இதன் நிலைப்பாடு எப்படி இருக்கும் ?**

இதைப்பற்றி நான் ஏற்க்கனவே பல மேடைகளில் பலதளங்களில் குறிப்பிட்டு இருக்கிறேன் அதாவது எப்போதும் தமிழர்களிடம் ஒரு குறை இருக்கிறது. ஆண் பெண் என்ற உறவு முறையில் நிறைய இடை வெளிகள் காணப்படுகிறது பாரிய சிக்கல்களுடன் தான் இருக்கிறது அப்படி இருக்கும் பொது நமக்கு தெரிந்த பிள்ளையை எங்களுடன் நடிக்க வரச்சொல்லி கூப்பிட்டால் இல்லை நான் வர மாடடேன் நிறைய பிரச்சினை இருக்கும் நாளைக்கு தேவையில்லாமல் கதை கட்டுவார்கள் என்று ஒரு பிரம்மையுடன் கூறுவார்கள் இப்படியாக இந்த விடயத்தை பார்க்கும் போது பெண்களை பிழை சொல்ல முடியாது இதற்க்குக் கடந்த காலங்களில் நடந்த பல விடயங்கள் நல்ல உதாரணம் இப்படியான பிரச்சினை இங்குமட்டுமல்ல அனைத்து நாடுகளிலுமே இந்த துறையில் பயணிக்கும் பல பெண்கள் பல சிக்கல்களுக்கு ஆளாகியிருக்கிறார்கள் இப்படியான பிரச்சினைகளால் பிள்ளைகளின் பெற்றோர்கள் பெண் பிள்ளைகளை இந்த துறைகளுக்கு விடுவதை விரும்ப வில்லைசொல்ல போனால் பெற்றோர்கள் இந்த திரைப்பட துறையை ஒரு கலைத்துரையாகவே பார்ப்பதில்லை ஆனால் அவர்களின் தனிப்பட்ட நிகழ்வுகளான பாரத நாட்டியம் . பாடல் போட்டிகள் போன்ற துறைகளில் ஆர்வமாக உள்ளார்கள் .

**அண்மைக்காலங்களில் வெளிவந்த குறும்படங்கள் குறுகிய நேரத்தை தவிர்த்து மட்டுப்படுத்தப்படாத நேர அளவுகளில் படங்கள் வெளியாகின்றனவே அதற்கு என்ன காரணம் ,? குறும்படம் என்பதற்கு நேர எல்லை இருக்கிறதா அல்லது உங்களுக்கு என்று ஒரு நேர எல்லையை வரையறுத்து வைத்திருக்கின்றிர்களா அல்லது கிடைத்திருக்கும் கதைக்கான நேரத்தின் அடிப்படையில் படைப்புக்களை வெளியிடு செய்கின்றீர்களா ?**

நான் அறிந்த வரைக்கும் போட்டிகளுக்கு அனுப்பப்படும் குறும்படங்கள் 15 நிமிடங்கள் மட்டுமே ஆனால் நம்மவர்களால் (தமிழர்கள் ) நடாத்தப்படும் போட்டிகளில் வெளியடப்படும் குறும்படங்களின் நேரக்கணக்கு 22 நிமிடங்களாக வரையறுக்கப்ட்டுள்ளது இப்படியாக இந்த போட்டிகளுக்காக நாங்கள் அனுப்புவதானால் அதே நேரக்கணக்கை நாங்களும் பழக்கத்திலக் கொண்டு வந்து விட்டோம் ஆனால் இதைவிட குறைவான நேரத்திலும் நாங்கள் படங்களை வெளியிட்டிருக்கிறோம் அதாவது கதையின் தன்மையை பொறுத்து உதாரணத்துக்கு தற்போது சமூக வலைத்தளங்களில் பதிவேற்றிய படங்களை குறிப்பிடலாம் .

**உங்கள் படைப்புக்களுக்காக உங்களுக்கு கொடுக்கபட்ட விருதுகள் உங்களுக்கு முழு திருப்தியை கொடுக்கிறதா ?**

என்னை ஒரு சிறந்த கலைஞனாக கவுரவப்படுத்தி எனக்கு கொடுக்கபட்டிருக்கும் விருதுகளினால் எனக்கு ரொம்ப சந்தோசமே எனது திறமைக்கு இதுவரை இங்குமட்டுமல்லாமல் பல் நாடுகளில் 14 தடவை விருதுகள் கிடைத்திருக்கிறன சமீபத்தில் கூட இரண்டு விருதுகள் சிறந்த துணை நடிகருக்காக கிடைத்திருக்கின்றன

அனால் இத்தனை விருதுகளும் எம்மவரினால் தான் வழங்கி கவுரவப்படுத்தப்பட்டிருக்கிறேன். இப்படி கொடுக்க பட்ட விருதுகள் மக்களால் அறியப்படுவதில்லை என்பது கவலைக்குரிய விடயம் உதாரணம் சொல்ல போனால் ஹன் அன் ரிங் (Gun&Ring ) திரைப்படத்துக்கு சங்காய் திரைப்பட விழாவுக்கு போட்டிக்கு சென்றிருப்பதை யாரும் அறிந்திருக்கவில்லை.

**ஈழத்து கலைஞனாக இருந்து கொண்டு தமிழ் நாட்டு திரைப்படங்களையும் திரைக்கதைகளையும் எவ்வாறான விமர்சனத்துக்கு உள்ளாக்குகின்றீர்கள்?**

ஆரம்பம் தொட்டு இன்று வரைக்கும் தமிழ் நாட்டு திரைக்கதைகள் அவர்கள் இடங்களில் அவர்கள் நாடுகளில் நடை பெற்ற சம்பவங்களை கருவாக வைத்து எடுக்கப் படுகிறது ஆனால் அவை அனைத்தும் வியாபார நோக்கத்தோடு தான் படைக்கப்படுகிறது அப்படி இருக்கும் போது அந்த படைப்புக்களை விமர்சிக்கும் தகுதி எங்களிடம் இல்லை என்று கூற வேண்டும் அவை விமர்சனத்துக்கு உள்ளாக்கப் பட வேண்டிய படைப்புக்களும் இல்லை ஏன் என்றால் முழுக்க முழுக்க பாரிய வியாபர நோக்குடனேயே எடுக்க படுகின்றன

ஆனால் இதில் விதி விலக்காக இயக்குனர் பாலாவின் சில படைப்புக்கள் சமூக சிந்தனையுடன் வெளி வந்திருப்பது குறிப்பிட தக்கது

இதே நேரம் எங்களின் படைப்புகள் நிறைய விமர்சனத்துக்கு உட்பட்டிருக்கு ஏன் என்றால் தென் இந்திய




கலைஞர்களுடன் ஒப்பிடும் போது எங்கள் அனுபவம் வெறும் இரண்டு வீதம் மட்டுமே !

**உங்களின் தயாரிப்பான வஞ்சகம் திரைப்படம் தமிழ் நாட்டுநிறுவனம்ஒன்றினால் வெளியிடப் போவதாக அறிந்திருக்கிறேன் அது பற்றி தெரிந்து கொள்ள முடியுமா ?**

ஆம் தமிழ் நாட்டு சினிமாவில் பல வெற்றி படங்களை தயாரித்த எனது நண்பர் ¹ .தேனப்பன் என்மேல் அக்கறை உள்ள ஒரு நண்பர் அவர் எனக்காக எக்குலூஸ் .ரிவர் என்ற இரண்டு பிரெஞ்சு மொழி குறும்படங்களை தயாரித்து கொடுத்திருக்கிறார் அப்படி இருக்கையில் நான் என்னுடைய வஞ்சகம் திரைப்படம் பற்றி கதைத்த பொழுது அவராகவே கேட்டிருந்தார் தமிழ் நாட்டில் அவர்களது மொழி உச்சரிப்பில் மாற்றம் செய்து வெளியீடு செய்வதாக கேட்டார் முதலில் நான் ஒத்து கொள்ளவில்லை பின்னர் நீண்ட யோசனையின் பின்னர் ஒத்து கொண்டேன் காரணம் எனது அடுத்த கட்ட வளர்ச்சிக்கு இது படிக்கல்லாக அமைந்திடும் என்ற நம்பிக்கையில் . இருக்கிறேன் பார்க்கலாம்!

**வஞ்சகம் திரைப்படத்தின் கதையின் பின்னணி என்ன சொல்ல முடியுமா ?**

சாதாரண போராளி வெளிநாடு வருகிறார் போராளி என்றவுடன் நீங்கள் ஆரசியல் கதையாக நினைக்க வேண்டாம் முள்ளி வாய்க்கால் பேரவலத்துக்கு பின்னர் புலம் பெயரும் ஒரு போராளியின் சாதாரண மனித வாழ்கையில் ஏற்படும் மாற்றங்கள் அவரின் வாழ்க்கை முறை பற்றிய பதிவே இது

**பிரான்சில் இருக்கும் ஈழத்தமிழர் திரைப்பட சங்கம் கலைஞர்கள் சார்ந்து எவ்வாறான உதவிகளை செய்கிறது ?**

இந்த சங்கம் 2007ம் ஆண்டு குணா அவர்களால் போடப்பட்ட அத்திவாரம் இன்று இது பல்வேறு அமைப்புக்களுடன் சேர்ந்து வளர்ச்சிப் பாதையை




நோக்கி பயணித்து கொண்டிருக்கிறது பிரான்சைப் பொறுத்தவரையில் இங்கிருக்கும் கலைஞர்களுக்கு இது கட்டாயம் தேவைப்படும் ஒரு அமைப்பாக இருக்கிறது பல புதிய கலைஞர்களுக்கு வழி காட்டியாக கலைஞர்களை உள்வாங்குவதில் பெரும் பங்கு வகிக்கும் என்பதில் ஐயமில்லை! அது மட்டுமல்லாமல் இனி வரும் காலங்களில் தெனிந்திய திரைப்பட சங்கம் போன்று வெளிவரும் அனைத்து திரைப்பட வெளியீடுகளும் இந்த சங்கத்தின் ஊடாகவே வெளிவர வேண்டும் என்ற விருப்பம் உண்டு அப்படி நடந்தால் தான் கலைஞர்கள் ஊக்குவிக்கப் படுவார்கள் அதற்க்கான வேலைத்திட்டமும் நடை பெற்றுக் கொண்டிருக்கிறது

**சங்கம் இருப்பது வெளியில் யாருக்கும் தெரியாதே ?**

ம்ம் சங்கம் இப்போது தான் வளர்ச்சி பெற்று கொண்டிருக்கிறது வெளிப்படையாக செயல்படுவதற்கு பாரிய பொருளாதார உதவி தேவை காலப்போக்கில் அவை அனைத்தும் நிவர்த்தி செய்யப்பட்டு வளர்ச்சிப் பாதையில் மக்களிடம் சென்றடையும் என்று நம்புகிறேன்

**தொடர்ந்து உங்கள் படைப்புக்களில் போராட்ட கதைகள் , விடுதலை கதைகள் போன்றவற்றை உங்கள் சினிமாவில் காட்சி படுத்த உள்ளீர்களா அல்லது வித்தியாசமாக நவ ரஞ்சக கதைகள்கொண்ட படைப்புக்கள் வெளிவருமா?**

அதாவது நான் எனது சமூதாயத்துக்கு ஊடாக கண் முன்னே பார்த்த சில சம்பவங்களை வைத்து தான் எனது படைப்புக்களை வெளியிடுகிறேன் உண்மையில் சொல்லப் போனால் புத்தகங்களையோ அல்லது இணையத்தில் வரும் பதிவுகளை வைத்தோ நான் படமாக்குவதில்லை முடிந்தளவு சமுதாயத்துப் பிரச்சினைகளையே பதிவு செய்திருக்கிறேன் நாடு சம்பந்தமான கதைகள் அந்த நேரத்தில் சூழ் நிலைக்குத் தேவை என்று நினைக்கும் போது அதை மக்களின் வலிகளை பிரதிபலிக்கும் ஒரு ஆவணமாகத் தான் பதிவு செய்திருக்கிறேன்

ஆனால் காலப்போக்கிலப் போராட்டம். போர் என்பவற்றை தவிர்த்து பொழுது போக்கு சம்பந்தமான விடயங்களை பதிவு செய்ய முயற்சிக்கிறேன் சமீபத்தில் பதிவும் செய்திருக்கிறேன் உதாரணமாக நாதாரி ,லீவு லீவு ,நடிகனாக போகிறேன் , தில்லு முல்லு போன்றவற்றை குறிப்பிடலாம்

**முகடு சஞ்சிகை ஊடாககுறிபிட்டுசொல்ல விரும்பும் விடயம் ?**

தொடர்ச்சியாக எனது படைப்பை மட்டும் பார்க்காமல் சக நண்பர்களின் படைப்புக்கள் ஈழத்து படைப்பளிகளின் படைப்புக்கள் என்பனவற்றையும் பார்த்து அவர்களையும் ஊக்கப்படுத்த வேண்டும் அந்தப் படைப்புக்களில்த் தோன்றும் சரி பிழைகளை சுட்டு காட்ட வேண்டும் அதுமட்டுமல்லாமல் வெளிவரும் எங்களின் படைப்புக்களை முடிந்தளவு திரை அரங்கினுள் சென்று பார்க்கவும் அதனால் வரும் வருமானத்தை வைத்து மேலும் பல படைப்புக்களை எங்களால் உருவாக்க முடியும் முடிந்தளவு தெனிந்திய சினிமாவுக்கு கொடுக்கும் ஆதரவினை எங்களுக்கும் கொடுத்து ஊக்க படுத்தவும் லேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்

எனது படைப்புக்களில் வரும் விடயங்களை மிகைப்படுத்தி உங்கள் மீது திணிப்பதாக நினைக்க வேண்டாம் அதை ஒரு சாதாரண விடயமாக பொழுது போக்கு தன்மையுடன் பார்க்கவும்

மேலும் ஆரம்ப காலங்களில் எங்களை பற்றிய நேர்காணல்கள் செவ்விகள் போன்றவற்றை வெளியிட்டு எங்களை ஊக்க படுத்த நிறைய பத்திரிகைகள் சஞ்சிகைகள் இருந்தன ஆனால் இப்போது அவையில்லை அந்த இடத்தை நிருப்புவதற்க்கு எமக்கு கிடைத்திருக்கும் வாய்ப்பாக முகடு சஞ்சிகை அமைந்திருக்கிறது இந்த நேர்காணல் வாய்பை வழங்கிய முகடு சஞ்சிகை நிவாகத்துக்கு நன்றியை. தெரிவித்து கொள்கிறேன்

# மகளிர் தினம்



1789 ஆம் ஆண்டு ஜூன் 14 ஆம் திகதி சுதந்திரத்துவம், சமத்துவம், பிரநிதிநித்துவம் என்ற கோரிக்கைகளை முன்வைத்து பிரெஞ்சுப் புரட்சியின் போது பாரிஸில் உள்ள பெண்கள் போர்க்கொடி உயர்த்தினர். ஆணுக்கு நிகராக பெண்கள் இந்தச் சமுதாயத்தில் உரிமைகள் பெற வேண்டும் என்றும், வேலைக்கேற்ற ஊதியம், எட்டு மணிநேர வேலை, பெண்களுக்கு வாக்குரிமை, பெண்கள் பெண்ணடிமைகளாக நடத்தப்படுவதிலிருந்து விடுதலை வேண்டும் என்றும் பெண்கள் கிளர்ச்சிகளில் ஈடுபட்டனர். கையில் கிடைத்த ஆயுதங்களை எடுத்துக்கொண்டு பாரிஸ் நகரத் தெருக்களில் அணி திரண்டனர். புயலாகக் கிளம்பிய பூவையரை துரும்பாக எண்ணிய அந்நாட்டு அரசன் இடியென முழங்கி, இவர்களை என் அதிகாரம் கொண்டு அடக்குவேன் என்றும், ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவோரைக் கைது செய்வேன் எனவும் அறிவித்தான். ஆயிரக்கணக்கான பெண்கள் கூட்டம். அவர்களுக்கு ஆதரவாக ஆண்களும் ஆயிரக்கணக்கில் கலந்து கொள்ள உற்சாகம் கரைபுரள கோஷங்கள் வானைப் பிளக்க அரச மாளிகை நோக்கி ஊர்வலம் கொட்டும் மழையில் ஊர்ந்து சென்றது. அரச மாளிகை முன்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டஅனைவரையும் கைது செய்வோம் என்று மிரட்டிய அரசனின் மெய்க்காப்பாளர் இருவரையும் திடீரென கூட்டத்தினர் பாய்ந்து தாக்கிக் கொன்றனர். இதை எதிர்பாராத அரசன் அதிர்ந்து போனான். கோரிக்கைகளை கண்டிப்பாக பரிசீலிப்பேன். உங்களுக்குச் சாதகமாக அறிவிப்பேன் என்று ஆர்ப்பாட்டத்தில் கொதித்தெழுந்தவர்களைச் சமாதானப் படுத்தினான். இயலாது போகவும், அரசன் லூயிஸ் பிலிப் முடிதுறந்தான். இந்தச் செய்தி ஐரோப்பிய நாடுகளில் வேகமாகப் பரவிட அங்கும் பெண்கள் போராட்டங்களில் ஈடுபட்டனர். தொடர்ந்து கிரீஸில் லிசிஸ்ட்ரடா தலைமையில் ஜெர்மனி, ஆஸ்திரியா, டென்மார்க் நாடுகளைச் சேர்ந்த பெண் பிரதிநிதிகள் கலந்துகொண்டு தொடர் போராட்டங்களில் ஈடுபட ஆளும் வர்க்கம் அசைந்து கொடுக்கத் தொடங்கியது. இத்தாலியிலும் பெண்கள் இதுதான் சமயம் என்று தங்களது நீண்டநாள் கோரிக்கையான வாக்குரிமையைக் கேட்டு ஆர்ப்பாட்டங்களில் இறங்கினர். பிரான்சில், புருஸ்ஸியனில் இரண்டாவது குடியரசை நிறுவிய லூயிஸ் பிளாங்க், பெண்களை அரசவை ஆலோசனைக் குழுக்களில் இடம்பெறச் செய்யவும் பெண்களுக்கு வாக்குரிமை அளிக்கவும் ஒப்புதல் தந்தான். அந்த நாள் 1848 ஆம் ஆண்டு மார்ச் 8ம் நாளாகும். அந்த மார்ச் 8 ஆம் நாள் தான் அனைத்துலக பெண்கள் நாள் உலகெங்கும் அமைய ஒரு வித்தாக அமைந்தது.

# MOSSAD

STALIN DASS

இன்று இவர்களை கண்டு அச்சப்படாத அரசுகளோ, தலைவர்களோ இல்லை எனலாம்.

இசுரேலிய உளவு நிறுவனமான மொசாட் உலகின் சக்தி வாய்ந்த உளவு அமைப்புகளில் ஒன்று. இன்று உலகில் இவர்கள் ஊடுருவாத நாடே கிடையாது. உளவு சேகரிப்பு, அரசியல் படுகொலைகள், ஆட்சி கவிழ்ப்பு, ஆட்கடத்தல், சதி செயல்கள், குண்டுவெடிப்புகள், பயங்கரவாதம் என இவர்களின் கைவரிசைகள் ஏராளம்.
அமெரிக்காவின் சி ஐ ஏ வால் சாதிக்க முடியாத பலவற்றையும் கூட இவர்கள் சாதித்து காட்டியிருக்கிறார்கள்.

1960களில் அமெரிக்காவுக்கும் ஏனைய நேச நாடுகளின் விமானப்படைகளுக்கும்
பீதியை ஏற்படுத்தியது சோவியத் தயாரிப்பான புதியவகை MIG21 போர் விமானங்கள். உலகம் முழுவதும் சல்லடை போட்டு சலித்தும் சி ஐ ஏ வால் ஒரு விமானத்தையும் நெருங்க முடியவில்லை காரணம் ருசியர்கள் அந்த விமானத்தை அதீத பாதுகாப்புடன் வைத்திருந்தனர். அமெரிக்காவின் எதிரிகளுக்கு மட்டுமே அந்த போர் விமானகளை விற்றிருந்தது சோவியத் ஒன்றியம். யாரும் சற்றும் எதிர்பாராத விதமாக 1966ம் ஆண்டு ஈராக்கின் ஒரு விமானபடை தளத்திலிருந்து ஒரு மிக் 21 போர்விமானத்தை கடத்தி வந்து அனைவரையும் வாயடைத்து போகச் செய்தது மொசாட்.

அத்தோடு மட்டும் நிறுத்திக்கொள்ளாமல் கடத்தி வந்த போர்விமானத்தை அமெரிக்க அரசுக்கு விற்று அமெரிக்காவின்
அதிநவீன தயாரிப்பான F4 Phantom போர்விமானங்களைக் கைமாறாகப் பெற்றது. இதன் மூலம் மத்திய கிழக்கில் அதுவரை கத்துக்குட்டியாக இருந்த இசுரேலிய விமான படையின் பலம் பன் மடங்கு அதிகரித்தது.

சில நேரங்களில் ஒரு படி மேலே போய் அமெரிக்காவின் கழுத்திலேயே கத்தி வைத்த தருணங்களும் உண்டு. இதற்கு ஒரு உதாரணம்

1998 ஆம் ஆண்டு அமெரிக்க
அதிபர் பில் கிளிண்டனுக்கும் வெள்ளை மாளிகையில் பணியாற்றிய மோனிகா லெவின்ஸ்கி என்ற இளம் பெண்ணுக்கும்
தொலைபேசி வழி நடந்த உரையாடல்களை பதிவு செய்து. அவர்களுக்கு இடையே இருந்த உறவை அம்பலப்படுத்தி ஆட்சிக்கவிழ்ப்பு வரை கொண்டு சென்றனர். 1998 இல் கிளிண்டன் எப்படியோ தாக்குபிடித்துவிட்டார். ஆனால் 2000 ம் ஆண்டு நடந்த தேர்தலில் கிளிண்டனின் மக்களாட்சி கட்சி தோல்வி அடைய இது முக்கிய காரணமாக கருதப்பட்டது. கிளிண்டனே இதை ஒப்புக்கொள்ளவும் செய்தார்.
"a terrible moral error> if people have unresolved anger, வை makes them do non-rational> destructive things". என்று இதுகுறித்து ஒரு பேட்டியில் அவர் தெரிவித்திருந்தார்.

இன்றும் மத்திய கிழக்கில் அமெரிக்காவின் உளவுத்தகவல்களை இவர்கள் திருடுகின்றனர் என்றும் அரசு

கணினிகளில் நச்சுநிரல்களைப் புகுத்தி வேவு பார்க்கின்றனர் என்றும் சி ஐ ஏ குற்றம் சாட்டுகிறது. ஆனால் அமெரிக்காவால் வெளிப்படையாக கண்டிக்க முடியாது.

இப்படி இன்று அனைவரையும் அச்சுறுத்தும் இந்த அமைப்பு எதற்காக எப்படி ஆரம்பமானது தெரியுமா ?

1938 ஆம் ஆண்டு இன உணர்வு கொண்ட சில யூத இளைஞர்களால் ஆரம்பிக்கப்பட்ட பெயரில்லா இயக்கம். அன்று இவர்களுக்கு இருந்த ஒரே நோக்கம் ஜெர்மனியிலும், உலகின் பிற இடங்களிலும் பரவிகிடந்த யூதர்களை கொஞ்சம் கொஞ்சமாக சட்டவிரோதமாக பாலசுதீன மண்ணில் குடியேற்றுவது.

பாலசுதீனத்தை ஆண்டு வந்த ஆங்கிலேய அரசாங்கம் மிக குறைந்த அளவிலான யூதர்களையே பாலசுதீன மண்ணில் சட்டப்பூர்வமாக குடியேற அனுமதித்திருந்தது. இதற்கே அரபு மக்கள் கடும் எதிர்ப்பு காட்டினர். வன்முறைகள் நடந்தன.
மறுபுறம் ஜெர்மனியில் கிட்லர் யூதர்களுக்கு கடும் அச்சுறுத்தலாய் இருந்தார். உலகின் பல பகுதிகளிலும் இதே நிலை.
கிடைக்கும் சொற்ப நிதியில்போலி ஆவணங்கள் தயாரித்து, மாட்டிக்கொண்டால் அதிகாரிகளை சரி கட்டி யூத மக்களை அவர்கள் இருக்கும் நாட்டிலிருந்து சட்டவிரோதமாய்அழைத்துவந்து ஆங்கிலேயர்களுக்கும் அரேபியர்களுக்கும் தெரியாமல் பாலசுதீனத்தில் குடி அமர்த்துவது தான் இவர்களின் இலக்கு. பல இன்னல்களுக்கும் இழப்புகளுக்கும் இடையேயும் தங்கள் பணியை தொடர்ந்தார்கள் இவர்கள்.
1939 ஆம் ஆண்டு ஏப்ரல் 29 ம் தேதி இந்த இயக்கத்துக்கு Mossad LeAliyah Bet (The organization for Illegal Immigration) என்று பெயரிட்டு யூதர்களை சட்டவிரோதமாக குடியேற்றம் செய்வதை முழுவீச்சில் முடுக்கி விட்டனர். இசுரேலிய உளவு அமைப்பின் தோற்றுவிப்பாளராக கருதப்படும் சாகுல் அவிகூர் இந்த அமைப்புக்கு தலைமை ஏற்றார்.

ஆரம்பத்தில் கிரேக்க தலைநகர் ஏதன்சிலிருந்தும் பின்பு பிரான்சின் பாரிஸ் நகரிலிருந்தும் இயங்க ஆரம்பித்தனர்.
விரைவில் 50க்கும் மேற்பட்ட கடற் கலங்களை சொந்தமாக இயக்க தொடங்கினர். பல நூற்றுக்கணக்கான யூதர்கள் கடல் பயணங்களில் கொல்லப்பட்டனர். ஆனால் சில பத்தாயிரம் யூதர்கள் இவர்களால் உயிர் தப்பி பாலசுதீனத்தில் குடியேறினர்.
இசுரேல் என்ற தனி நாடு உருவான பின்னர் HaMossad leModiʿin uleTafkidim Meyuḥadim (The Institute for Intelligence and Special Operations) என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டு உளவு வேலைகளையும் பாதுகாப்பு வேலைகளையும் கவனிக்க தொடங்கியது இதே அமைப்பு.

இசுரேலின் பாதுகாப்பு படைகளுக்கும் அரசாங்கத்துக்கும் முதுகெலும்பாய் விளங்கும் மொசாட், தொடக்கம் முதல் இன்று வரை பல நாட்டு அரசாங்கங்களின் கண்களில் மண்ணைத்தூவியே யூதர்களை காத்து வருகிறது.

இன்றைய சூழலில் அந்நிய மண்ணில் ஏதிலிகளாய் பரிதவிக்கும் தமிழர்களின் பிரச்சனைகளையும், அவர்களின் குடியேற்ற சிக்கல்களையும் கையாளுவதற்கு மட்டுமாவது, முழு அர்ப்பணிப்புடன் இயங்கும் ஒரு ஒழுங்குபடுத்தப்பட்ட அமைப்பை மீள்கட்டமைப்பது தமிழினத்தின் கடமையாகிறது. அன்று அனைத்துலக அரங்கில் யூதர்களின் குடி அமர்வு பிரச்சனைகளை கையாளவும், பாலசுதீன மண்ணில் யூதர்களை மீள் குடியேற்றம் செய்யவும் உருவான அந்த பெயரில்லா அமைப்பை நாம் முன்மாதிரியாய் கொள்ளலாம்.
ஆலோசனையில்லாத இடத்தில் மக்கள் விழுந்துபோவார்கள் அநேக ஆலோசனைக்காரர் உண்டானால் சுகம் உண்டாகும்."
- சாலமோனின் நீதிமொழிகள் 11:14
( மொசாட்டின் குறிக்கோளுறை )

# பழமொழி.

- ✔ ஊர் உண்டு பிச்சைக்கு, குளம் உண்டு தண்ணீருக்கு.
- ✔ ஊர் வாயை மூட உலைமுடி இல்லை.
- ✔ ஊழி பெயரினும் ஊக்கமது கைவிடல்.
- ✔ ஊனுகு முத்துவான் வேலைக்குப் பிந்துவான்.



# கேள்விக்குறியாக இருக்கும் யாழ்ப்பாண வாழ்வியல்

அ.மயூரன்.
ஊடகவியலாளர்
லண்டன்.

யாழ்ப்பாணம், இலங்கைத்தீவின் தலை எனவும், அதன் மூளை எனவும் சொல்லப்பட்ட ஒரு காலம் இருந்தது. அது உண்மைதான். ஆனால் இன்று அந்தத் தலைக்கு குறிவைக்கப்பட்டுவிட்டது. யாழ்ப்பாணத்தின் வாழ்வாதாரம் அந்த வரண்ட மண்ணின் நிலத்துக்கடியில் கிடக்கின்ற நிலக்கீழ் நன்னீரை மையப்படுத்தியதாகவே செழித்து வளர்ந்தோங்கியிருந்தது.

தற்போது பார்க்கின்ற யாழ்ப்பாணத்தின் பச்சைப்பசேலென்ற செழிப்பிற்கு இந்த நிலக்கீழ் நீர் இன்றியமையாதது. கடந்த முப்பது வருடங்களுக்கு மேலாக யாழ்ப்பாணத்தின் நன்னீர் வளத்தைப் பாதுகாக்கவும் மேம்படுத்துவதற்குமான பல்வேறு செயற்திட்டங்கள் முன்மொழியப்பட்டும் ஆரம்பிக்கப்பட்டும் இருந்த போதிலும் யுத்த சூழ்நிலை காரணமாக அவை எதுவும் செயல்வடிவம் பெறாமலே போயிற்று. ஆனால் இன்று யாழ்க்குடாவின் நன்னீரின் தேவை அதிகரித்திருக்கின்ற போதிலும் இருக்கின்ற வளம் மட்டுப்படுத்தப்பட்டதாகவே இருக்கிறது. இந்தநிலையில் இருக்கின்ற வளத்தைப் பாதுகாப்பதற்கே பெரும் சவாலை யாழ்க்குடா எதிர்நோக்கியிருக்க தற்போது திட்டமிட்ட

ரீதியில் யாழ்க்குடாவை பாலைவனமாக மாற்றும் நயவஞ்சகச் சதித்திட்டங்கள் சந்தடியின்றி வேகமாக முன்னெடுக்கப்பட்டு வருவது துரதிஸ்டமானது.

யாழ்க்குடாவின் தரைத்தோற்ற அம்சங்களை நோக்குகையில் புத்தளம் - முல்லைத்தீவு ஆகியவற்றைத் தொடுக்கின்ற நேர்கோட்டிற்கு கோட்டிற்கு வடக்கேயும், வடமேற்கேயும் சுண்ணாம்புக்கல் படிமங்கள் கலந்த பாறை காணப்பட இதற்குத் தெற்கே தொல்காலப் பாறைகளும் காணப்படுகின்றது. யாழ்க்குடாநாட்டிலே காணப்படும் பாறைப்படிமங்களை

1.பிளைத்தோசின் கால அடித்தளப் பாறைகள்,

2.மன்னார் மணற்கற் பாறைகள் (யுறாசிக் பாறைப்படிவு),

3.சுண்ணாம்புக்கற்பாறைகள்.

என மூன்றுவகையாகப் பிரிக்கலாம் பிளைத்தோசின் கால அடித்தளப் பாறைகள் கிட்டத்தட்ட 240 மீற்றர் ஆழத்திலும் அதற்கு மேல் யுறாசிக் பாறைப்படிவுகளும் அதன்மேல் மயோசின் கால சுண்ணக்கற்பாறைகளும் பரவலாகக் காணப்படுகின்றன. மன்னார் மணற்கற் பாறைகள் (யுறாசிக் பாறைப்படிவு), கிட்டத்தட்ட 130 மீற்றர் தடிப்பைக் கொண்டிருக்கின்றன. இவை மிகவும் கரடு முரடான வண்டல் மற்றும் களிமண் படையமைப்பைக் கொண்டுள்ளது. (1964 இல் மன்னார் மற்றும் பளையில் பரிசோதிக்கப்பட்டது) அடுத்துள்ள மயோசின் காலச்சுண்ணற் பாறைப்படையானது சுமார் 90 மீற்றர் தடிப்பையும் சாம்பல், வெள்ளை, பழுப்பு ஆகிய நிறங்களை உடையனவாகவும் உள்ளன.

இவ் சுண்ணாம்புக்கற் பாறைகளுடன் எஞ்சிய பிளியோசின் - பிளைத்தோசின் கால பாறை எச்சங்களையும், களிமண், பழுப்புமண்,
இயோலியன் மணல், குவாட்டினரி காலத்தைச் சேர்ந்த பவளப்பாறைகள் என்பனவும் ஒரு மீற்றர் முதல் 15 மீற்றர்கள் வரையாக வேறுபட்டுக் காணப்படுகின்றது. யாழ்குடாநாட்டில் வளங்குறைந்த மண்ணிலிருந்து மண்வரை பல்வேறுபட்ட மண்வகைகள் காணப்படுகிறது. எனினும் 5 வகையான மண்களைப்
பிரதானமாகக் குறிப்பிடலாம். அவையாவன சுண்ணாம்புக்கல், உவர்மண், வெண்மணல், செம்மண், நரைமண் என்பவாகும். யாழ்க்குடாவின் வடகரையிலும், வடமேற்குக் கரையிலும் சுண்ணாம்புக்கல் பிரதேசம் காணப்படுகிறது. குடாநாட்டின் உட்புறத்தில் இருக்கும் உப்பாறு, தொண்டைமானாறு, வடமராட்சி ஆகிய கடல்நீர் ஏரிகளைச்சூழ்ந்து உவர்மண் பிரதேசம் காணப்படுகிறது. அத்துடன் வடகீழ் பகுதியிலும், தென் மேற்குக்
கரையோரப் பகுதிகளிலும் வெண்மணல் படிந்து காணப்படுகிறது. யாழ்குடாநாட்டின் மத்தியில் சுண்ணாகம் பகுதியை மையமாகக் கொண்ட பிரதேசத்தில் செம்மண் காணப்படுகிறது. ஏனைய பகுதிகளில் மணலும் களியும் கலந்த நரைமண் காணப்படுகிறது. நெடுந்தீவு மற்றும் கரையோரப்பகுதிகளில் முருகைக்கற்பாறைகளும் அமைந்துள்ளது.

மேலும் யாழ்க்குடாநாடானது ஈர, மற்றும் உலர் காலநிலைகளைக் கொண்ட வெப்பவலயப் பகுதியில் அமைந்துள்ளது. இங்குள்ள மக்களின் வாழ்வாதாரத்தினைத் தீர்மானிக்கின்ற சக்தியாக பருவமழையே அமைகின்றது. தென்மேற்கு மற்றும் வடகிழக்கு மூலம் மழைபொழிந்தாலும் ஐப்பசி மார்கழி மாதங்களில் நிலவுகின்ற வடகீழ் பருவப்பெயர்ச்சிக் காலத்தில் பெய்கின்ற மழையினால் 90 சதவீதமான மழையும், சித்திரை
வைகாசி மாதங்களில் நிலவுகின்ற மேற்காவுகை மழையினால் 10 வீதமான மழையும் கிடைக்கின்றது. வடகீழ் பருவப்பெயர்ச்சிக் காலத்திற்குற்பட்ட ஆனி முதல் ஐப்பசி வரையான காலம் உலர் வெப்பநிலை நிலவுகின்ற
காலமாகும். யாழ் மாவட்டத்தில் சாராசரி மழைவீழ்ச்சியாக 1300 மில்லிமீற்றரும் சராசரி வெப்பநிலையாக 28 முதல் 35 பாகை செல்சியஸ் இடைப்பட்டும் அமைகின்றது.

984 சதுரகிலோமீற்றர் பரப்பளவை உடைய யாழ்க்குடா நாட்டில் நிலத்தடி நன்னீர் படுக்கையானது கிட்டத்தட்ட ஐந்து முதல் நாற்பது மீற்றர்கள் வரையான ஆழத்தில் உவர் நீரில் மிதந்தவாறு மூன்று வில்லைகளாக அமைந்துள்ளன. அதாவது தீவுப்பகுதியில் ஒரு வில்லையும் வலிகாமம்பகுதியை உள்ளடக்கியதாக ஒரு வில்லையும், தென்மராட்சிப் பகுதியை உள்ளடக்கிய ஒரு வில்லையுமாக 3 வில்லைகள் நிலத்தடி நன்னீராக அமைந்துள்ளது. இவற்றில் வலிகாமம் வில்லையே. ஆழமும், அகலமும் நிறைந்ததாகும். இந்த வலிகாமத்திலேயே குடிநீர்ப் பாவனைக்கு மிகவும் உகந்த 50ppm - 150 ppm இடைப்பட்ட குளோரைட் அளவுள்ள உயர்தரத் தன்மை கொண்ட தண்ணீர் கிடைக்கின்றது.

யாழ்க்குடாநாடு சுண்ணாம்புக்கல் நிறைந்த முருகைக்கற்பாறைகள் காணப்படுவதால் இவற்றில் மிக நுண்ணிய துளைகள் காணப்படுகின்றன. இதனால் தரையிலிருந்து உட்புகும் மழைநீரானது இத்துளைகள் வாயிலாக வன்பாறைப்படையை சென்றடைந்து தேங்குகிறது இதுவே நிலக்கீழ் நன்னீராகிறது. தரையை நாம் தோண்டி கினறுகளின் மூலம் இந்நன்னீரைப் பெற்றுக்கொள்ளுகின்றோம்.

உப்புநீர் நன்னீரைவிட அடர்த்திகூடியதால் உப்புநீரில் நன்னீர் மிதக்கின்றது.அதேபோல
தரையினூடே நிலத்தடிநீரைத்தொடும் எண்ணெய், கிறீஸ், ஓயில் முதலான பொருட்கள் அடர்த்தி குறைந்தனவாகையால் அவை நன்னீரில் மிதக்கின்றன. இதனால் தான் சுண்ணாகம் பகுதியில் அனல்மின் நிலையத்தின் கழிவுகளும் நன்னீரில் மிதந்து பெரும் பாதிப்பை மக்களுக்கு ஏற்படுத்தியுள்ளன.

அந்தவகையில் சுண்ணாகத்தில் மின்நிலையமானது 1958 ஆண்டு லக்சபானா மின்வலையமைப்பின் கீழ் 8ஆறு மின்வலுவுடன்

நிறுவப்பட்டது. 1990 ஆண்டு வவுனியாவில் உள்ள மின்சாரக் கோபுரம் தகர்க்கப்பட்டதைத் தொடர்ந்து வடபகுதிக்கான மின்சாரவழங்கல் தடைப்பட்டது. அத்துடன் யாழ்க்குடாநாட்டில் தங்கியிருந்த இலங்கை இராணுவத்திற்கான மின்சாரத்தினை காங்கேசன் துறையிலிருந்து அனல்மின்நிலையமூடாக வழங்கினர். அதனை கூல்எயார் என்ற நிறுவனம் மேற்கொண்டிருந்தது. 1995 இல் யாழ்க்குடாநாடு முழுவதையும் இலங்கைப்படையினர் கைப்பற்றியதன் பின்னர் 1996 ஆண்டு தொடக்கம் சுண்ணாகம் மின்சாரசபை அருகில் இவ் அனல்மின்னிலையம் இயங்கியது. அதனைத்தொடர்ந்து 2002 ஆம் ஆண்டில் அக்ரிகோ (Agreko) என்ற நிறுவனத்திற்கு இந் அனல்மின்னிலையம் கைமாறியது. இதனது ஒப்பந்தமும்

காலாவதியாகிப் போக நொத்தேன் பவர் (Northen Power) என்கின்ற நிறுவனம் 2008 இல் யாழ்க்குடா நாட்டிற்கான மின்சார வழங்கலை பெறுப்பேற்றுக் கொண்டது. இருந்தபோதும் 2013 ஆம் ஆண்டிலேயே சட்டப்படி இந்த நொத்தேன் பவர் நிறுவனத்திற்கான அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

1996ஆம் ஆண்டிலிருந்து சுண்ணாகம் அனல்மின்நிலையத்தில் Heavy oil எண்ணெய்களைப் பயன்படுத்தி இயந்திரங்களை இயக்கினர். அத்துடன் ஆரம்ப காலங்களில் இவ்இயந்திரங்களிலிருந்து வருகின்ற எண்ணெய்க் கழிவுகளை சீமெந்துத் தொட்டிகளில் இட்டு மீள் பாவனைக்காக விற்பனைக்காக விற்பனை செய்தனர். Heavy oil எண்ணெய்கழிவு தடிப்பானது. இதனால் இவற்றைத் தொட்டியில் தேக்கிவைத்து சுத்திகரிப்பதென்பது அதிக செலவீனத்தைத் ஏற்படுத்துமென்பதால் எந்தவிதமான சூழற்பாதுகாப்புமின்றி அருகில் உள்ள கிணற்றில் அக்கழிவுகளை கொட்டினர். பின்னர் சில துளைகளை இட்டு அதற்குள்ளும் இக்கழிவுகளை இட்டனர். இதன் மூலம் எண்ணெய்கழிவுகளை அகற்றுதற்கான செலவுகளைத் தவிர்த்து கூடிய இலாபத்தினை ஈட்டியிருந்தனர். இதில் முக்கியமான விடயம் என்னவெனில் 2012 ஆம் ஆண்டுவரை எண்ணைக் கழிவுகளைப் பிரித்தெடுக்கும் சாதனம் இன்றியே சுண்ணாகத்தில் நொத்தேன் பவர் நிறுவனம் இயங்கிவந்திருக்கிறது. அத்துடன் குறைந்தவிலையில் கிடைக்கக்கூடிய கழிவுகள் தரும் எரிதிரவம் பாவித்து டீசல் பாவித்ததாக கணக்குக் காட்டியிருப்பதாகவும் சொல்லப்படுகிறது. மேலும் ஒவ்வொரு இயந்திரமும் 5.500 லீற்றர் கொள்ளவு கொண்டனவாக உள்ளன. அவை 1000 மணி நேரம் வேலை செய்தபின்னர் ஓய்வுக்கு விடவேண்டும் என்றும் மூன்று மாதம் ஒரு இயந்திரம் ஆறாயிரம் லீற்றர் கழிவு எண்ணெயை வெளியேற்றும் என்றும் இங்கு நான்கு முதல் ஆறு இயந்திரங்கள் இருந்ததாகவும் கூறப்படுகின்றது.

30ஆறு க்கு மேல் மின்உற்பத்தி செய்வதானால் அந்த இயற்திரங்களினால் வரும் கழிவுகளை எவ்வாறு வெளியேத்துவது என்பது தொடர்பாகவும், அவை சுற்றுவட்டாரத்தில் எந்தவகையிலான தாக்கங்களை ஏற்படுத்தும் என்பதையும் ஆராய்ச்சி செய்தே மேற்கொள்ளப்படவேண்டும். ஆனால் இலங்கை மின்சாரசபைக்கு 30ஆறு குறைவாகவே தாம் மின்னை உற்பத்தி செய்வதாகக் காட்டி அதற்கும் அதிகமான மின்உற்பத்தியை நொதேன்பவர்நிறுவனம் உற்பத்தி செய்ததாக கூறப்படுகிறது. பொதுவாக இலங்கை மின்சாரசபையினரே அந்த மின்சாரசபைக்கு வழங்கும் மின்சாரத்தின் மிகுதிக் கழிவுகளுக்கு என்ன நடக்கின்றது என்பது பற்றியதான விடையங்களை அறிந்திருக்க வேண்டும். ஆனால் இங்கு அப்படியேதும் நடந்ததற்கான அறிகுறிகளேயில்லை.

அனல்மின் நிலையம் இலங்கையில் முதன்முதல் 1981 ஆண்டு மாவெல்லவில் உருவாக்கப்பட்டு இன்று நாடுமுழுவதும் பதினொரு இடங்களில் உநயஎல மடை மூலம் இயங்குகிறது. இதில் 1996 ஆண்டிலிருந்து இயங்குகின்ற சுண்ணாகம் அனல் மின்னிலையத்தில் மாத்திரம் 2012 ஆம் ஆண்டுவரை மின்சார இயந்திரக் கழிவைப்பிரித்தெடுக்கும் சாதனம் (Oil separator ) பொருத்தப்படவில்லை. இது யாழ்க்குடா

மக்கள் மீது அரசிற்கு எந்தவிதமான கரிசனைகளும் இல்லையென்பதையே காட்டுகிறது. பொதுவாக ஹைட்ரோ காபன் அதிகமாக உள்ள கழிவு எண்ணெயானது வேகமாக ஆழஊடுருவிச் செல்லும் தன்மை கொண்டது. நுண்துளைகளைக் கொண்ட சுண்ணாம்புக்கற் பாறைகளில் எண்ணெய்கழிவானது வேகமாக ஊடுருவி நிலக்கீழ் நன்னீருடன் கலந்துவிட்டது. இதனுடைய தாக்கம் சுண்ணாகம் மின்சாரசபைக்கு அண்மையில் உள்ள கிணற்றிலிருந்து கந்தரோடைப் பகுதிகளுக்கான நீர்வழங்கல்களை மேற்கொண்ட போது 2008 ஆண்டு கண்டுபிடிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து சுண்ணாகம் தெற்குப்பகுதிகளில் உள்ள கிணறுகளிலும் இற்றின் தாக்கம் வெளிப்பட சுண்ணாகம் மக்கள். சுண்ணாகம் தெற்கு விவசாய சம்மேளனத்தின் தலைவர் தியாகலிங்கம் தலைமையில் 2008ஆம் ஆண்டு அப்போதைய யாழ்மாவட்ட அரசாங்க அதிபராக இருந்த கே.கணேஷ் அவர்களிடம் சென்று முறையிட்டனர். உடனடியான அரச அதிபர் கணேஷ் யாழ்மாவட்ட மின்சாரசபை திணைக்களத்திற்கு இதுகுறித்து கடிதம் ஒன்றினை 21.10.2008 ஆண்டில் எழுதினார். அதற்கு மின்சாரசபை தனக்கு இருந்த அன்றைய அரசியற் செல்வாக்கைப் பயன்படுத்தி அரச அதிபருக்கான எந்தவிதமான பதிலையும் வழங்காமல் மௌனம் சாதித்தது.

இதன்பின்னர் 2010 இல் டக்ளஸ் தேவானந்தாவிடமும் இதற்கான மகஜரினை கொடுக்கப்பட்டும் டக்ளஸ் தேவானந்தா பாராமுகமாகவே இருந்துவிட்டார். இதனால் கையறு நிலையான மக்கள் 2012 இல் மக்கள் வீதியில் இறங்கிப் போராடியிருந்தனர். இதனைத் தொடர்ந்து இலங்கை நீர்வழங்கல் வடிகாலமைப்புத் திணைக்களத்தின் தலைவர் திரு. ஹெட்டியாராய்ச்சியின் கவனத்திற்கு இவ்விடையம் செல்ல அவர் “நொத்தேன் பவர் நிலத்தில் கழிவு எண்ணெய்களை விடுவதால் வரும் பாதிப்புப் பற்றி தெரிவித்து இவற்றை உடனடியாக நிறுத்துமாறு சுற்றாடல் அதிகாரசபையின் இயக்குனர் ஜெனரலுக்கு அவசர கடிதம் ஒன்றினை அனுப்பியிருந்தார். இதற்கு அவர்கள் நடவடிக்கை எடுப்பதற்குப் பதிலாக திரு ஹெட்டியாராய்ச்சிக்கு பதவி நீடிப்பு செய்யாமல் கட்டாய ஒய்வில் அனுப்பிவிட்டார்கள்.

அத்துடன் இந்த நொத்தேன் பவர் நிறுவனத்தினுடைய நிறைவேற்றுப் பணிப்பாளராக இருக்கின்றவர் லால் பெரேரா என்பவர் இவர் முன்னாள் விமானப்படையின் தளபதியாக இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் இந்த நொத்தேன் பவர் நிறுவனத்தின் இலங்கைக்கான தற்போதைய முகாமை யாளராக ஜெகான் பிரசன்ன அமரதுங்க என்பவர் செயற்படுகிறார். இவர் தற்போதைய ஆளும் கட்சியினுடைய செல்லப்பிள்ளை ஆகவே அரசியல் தலையீடுகளும் அரசியற் செல்வாக்கு மிக்கவர்களுடைய சமூக விரோதப் போக்குகள் எப்போதும் கவனிப்பாரற்று இருக்கும் என்பது சொல்லித்தான் தெரியவேண்டும் என்பதில்லை.

தற்போது இவ்எண்ணெய்க்கழிவின் தாக்கமானது கொக்குவில். இணுவில், சங்கானை, கட்டுவன், மாவிட்டபுரம், கீரிமலை, ஏழாலை, குப்பிளான், என பலமைல்கள் சுற்றுவட்டாரத்தில் உணரப்பட்டிருக்கிறது. மல்லாகம் பிரதேசசபைக் கிணற்றில் எழுமாற்றாகப் பரிசோதிக்கப்பட்டபோது ஒரு லீற்றரில் 14மில்லிகிறாம் அளவு எண்ணெய்க்கழிவு கலந்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. உலக சுகாதார நிறுவனத்தின் கணிப்பின்படி ஒரு லீற்றருக்கு 0.25 மில்லிகிறாம் எண்ணெய்க்கழிவு கலந்திருந்தால் நீரில் கலந்திருந்தால் அந்நீர் குடிநீர் பாவனைக்கு உகந்தல்ல. ஆனால் யாழ்க்குடாவில் இதன் அளவு பன்மடங்கு அதிகரித்திருப்பது மிக ஆபத்தான ஒரு கட்டத்தை யாழ்க்குடா அடைந்திருப்பது என்பது புலனாகிறது. அத்துடன் இலங்கையில் தற்போது பாவனையிலுள்ள தொழில்நுட்பச் சாதனங்கள் 1 மில்லிகிறாம் அளவுக்கு மேற்பட்ட நீரில் கலந்திருக்கும் எண்ணெய் கழிவுகளையே காட்டும் என்பதிலிருந்து சுற்றுச்சூழற் பாதுகாப்பு எத்தகைய தரத்தில் இருக்கின்றதென்பதை நாம் விளங்கிக் கொள்ளமுடியும்.

இவ் எண்ணெய்க்கசிவின் தாக்கத்தினால் மலட்டுத்தன்மை, குறைபாடுடைய குழந்தைகள்



பிறத்தல், சிறுநீரக மற்றும் ஈரல் பாதிப்புக்கள், தோல்வியாதிகள், புற்றுநோய் முதலான நோய்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் அதிகமுள.

மேலும் எண்ணெய்கசிவு ஏற்படாத இடங்களிலிருந்து நன்னீரைப் பெற்று எண்ணெய்கசிவு ஏற்பட்ட இடங்களிற்கு வழங்குவதால் நன்னீரைப்பெறும் கிணறுகளில் உப்புத்தன்மை ஏற்படவும், எண்ணெய்க்கசிவு ஏற்படவும் வாய்ப்பிருப்பதால் விரைவில் மாற்று நீர்விநியோகமுறையை கையாளுதல் அவசியமானது. இப்படிப்பட்ட நிலத்தடி நன்னீரில் எண்ணெய்க்கசிவு உலகில் எந்தப்பகுதியிலும் நிகழ்ந்திருக்கவில்லையாதலால் உடனடியாக இதற்கான தீர்வினைக் காண்பது கடினமானது. சில காலங்களுக்கு முன்னர் அமெரிக்காவில்

தவறுதலாக எண்ணெய்கசிவு ஏற்பட்டபோது உடனடியாக அமெரிக்க அரசு நிலத்தடிநீரை வெளியகற்றி அதை சுத்திகரித்து மீண்டும் நிலத்திற்குள் செலுத்தியது. அமெரிக்கா சகல வசதிகளையும் கொண்டிருந்ததனால் மாற்று

வழிகளை உடனடியாகவே செய்திருந்தது. ஆனால் யாழ்குடாவில் இம்முறைபற்றி கற்பனை கூட செய்து பார்க்க முடியாத அளவிற்கு

பொருளாதார நிலைமை உள்ளது. நிலத்தடி நன்னீரில் எண்ணைய்க்கழிவு கலந்தால் எத்தகைய விளைவுகளை அது ஏற்படுத்தும் என்று தெரிந்துகொண்டே அச்செயலைப்

புரியத் துணைபுரிந்த அரசு எப்படி அக்கழிவுகளை அகற்றுதல் அல்லது நன்னீரிலிருந்து எண்ணெய்கழிவை பிரித்தெடுத்து சுத்தப்படுத்துதல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள உதவும் என்கின்ற கேள்வி எழுகின்றது. யாழ்க்குடாவில் நன்னீரின் பாவனை-னயினால் ஏற்படும் எதிர்கால விளைவுகளைக் கருத்திற் கொண்டு உவர்நீரினை நன்னீராக்கி, யாழ்குடாவிற்கான நீர்வழங்கல் திட்டத்தினை மேற்கொள்ளும் முயற்சிகள் 1920 களில் ஒனரபிள் திரு.பாலசிங்கதினாலும், 78, 79 காலப்பகுதிகளில் பேராசிரியர் திரு.செல்வநாயகத்தினாலும் (சமக்கோன்) மேற்கொள்ளப்பட்டபோதும் காலச்சூழ்நிலை அதற்கு இடமளிக்காமல் போயிற்று. பிழைப்புவாத தமிழ்அரசியற்கட்சிகள் இருக்கும்வரை இம்முயற்சிகள்சாத்தியமாகா.

யாழ்க்குடாவினுடைய எதிர்காலம் யாழ்க்குடாவினுடைய நன்னீர் வளத்தைப் பாதுகாப்பதும், அதனுடைய சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதிலையுமே தங்கியுள்ளது என்பதை கடந்த 30 வருடங்களாக சமூக ஆர்வலர்கள் பெருமெடுப்பிலான விழிப்புணர்வுச் செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்தாலும் கூட தமிழ் அரசியல் தலைவர்கள் பாராளுமன்றத்திலோ அல்லது எந்தவொரு ஆக்கபூர்வமான செயற்பாடுகளிலோ ஈடுபடவில்லை.

தமிழ் அரசியற் கட்சிகளின் வரலாற்றில் இந்தக் கட்சிகள் தமிழ்பிரதேசங்களின் சுற்றுச்சூழல் பாதுகாப்புப் பற்றியோ எந்தவிதமான ஆக்கபூர்வ

நடவடிக்கைகள் எதையும் எடுத்திருக்கிறார்களா என்றால் இல்லை என்பதே பதிலாக வரும். தமிழ் விபச்சார அரசியல்வாதிகளைப் பொறுத்தவரை தேர்தல்காலத்தில் வாக்குவங்கிகளை நிரப்புவதற்கான கூச்சல் கும்மாளங்கள்தான் அவர்களுடைய அரசியற் சித்தாந்தம். அரசியல் என்பது தான் பிரதிநிதித்துவப் படுத்தும் வர்க்கத்தின் சமூகப் பாதுகாப்பை உறுதிப்படுத்தல் என்பது இவர்களுக்கு சத்தியமாக இன்றுவரை தெரியாது. அரசியல் என்றால் என்னவென்றே தெரியாத விபச்சார தாசி அரசியல் வாதிகளை இனியும் தமிழ்மக்கள் நம்பியிருப்பது மன்குதிரையை நம்பி ஆற்றில் இறங்குவதற்கு ஒப்பானது. யாழ்க்குடாச் சமூகத்தினதும் சுற்றுச் சூழலையும் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு யாழ் மக்களிடமே உண்டு. சமூக நலனில் அக்கறையில்லாத அரசியல் வாதிகளை நம்புவது உழைப்பில்லாத கணவனைப் பெற்ற மனைவியின் நிலைமையைப் போலவே அமையும். எனவே எந்தவொரு அரசியல் கட்சிகளின் கைகளையும் நம்பியிருக்காது வீதிகளில் இறங்கி வெகுஜனப் போராட்டங்களை முன்னெடுப்பதன் மூலமும், விழிப்புணர்வுச் செயற்பாடுகளிலும் ஈடுபடுவதன் மூலமும் இப்பிரச்சனையை சர்வதேச நிறுவனங்கள் வரை கொண்டு சென்று உரிய பாதுகாப்பை பெறுவதற்கான நடவடிக்கைகளைத் தேடவேண்டும். அவ்வாறு தேடாத பட்சத்தில் இன்னும் இருபது ஆண்டுகளில் யாழ்க்குடாநாடானது பாலைவனமாக மாறுவதை யாராலும் தடுத்து நிறுத்த முடியாது.




## முகடு பற்றிய எனது கருத்துக்கள்!

charles j forman

முதலாவது தடவையல்ல, பல தடவைகள் நான் புலம்பெயர்ந்த சமூகத்திலிருந்து வெளிவரும் சஞ்சிகைகளைத் திறந்திருக்கிறேன், சேர்ந்து பணியாற்றியிருக்கிறேன். ஆரம்ப காலத்தில், ஆர்வத்துடன், அதன் பின்பு மெதுவாக ஆர்வம் வெறும் இயந்திரத்தனமான உள்வாங்குதலாகிவிட்டது.

இச்சஞ்சிகைகளை, பத்திரிகைகளை வெளியிடுபவர்களிடையே இருக்கும் தொடக்க ஆர்வத்தில் குறையிருப்பதாகத் தெரியவில்லை. விதம்விதமான பெட்டிக்குள் ஒவ்வொரு விதமான வெளியீடுகளையும் போடலாம். ஈழம், முதலாளித்துவத்துக்கு எதிர்ப்பு, தாராளமயம், இடதுசாரிகள், பெண்ணியங்கள் என்றெல்லாம் ஒவ்வொரு பெட்டகத்துக்குள் இவைகளைப் போடலாம். ஆனால், இவையெல்லாவற்றையும் மீறி நான் இச்சஞ்சிகைகளில் எல்லாம் காண்பது ஒரு முக்கிய விடயம் "பழமை பற்றிய கனவும், அக்கனவைச் சோடித்தலும்" என்றால் மிகையாகாது.

எழுத்துத் திறமை, கற்பனைத் திறமை, கொள்கைக் கண்ணோட்டம் எல்லாவற்றுக்கும் மேலாகப் புலம்பெயர் நாடுகளிலிருந்து வெளிவந்தாலும் இவை எல்லாவற்றிலும் இவைகளின் சுற்றிவர உள்ள பெரும்பான்மைச் சமூகத்துடன் புலம்பெயர்ந்த தமிழர்கள் எப்படி வாழ்கிறார்கள் என்பது ஆழமாகக் கவனிக்கப்படுவதில்லை. வெறுமனே வாழ்க்கையைப் பாரமாகவும், அர்த்தமில்லாததாகவும் விபரிக்கும் சில எழுத்துக்களைக் காணலாமே தவிர அதன் பரிமாணங்கள் எதுவுமே இல்லை என்பது மிகப்பெரிய பலவீனம்.

முகடு பத்திரிகையும் அதற்கு விலக்கல்ல. வழக்கம்போல "பழமையின் அழகு" விஸ்வரூபமாகத் தெரிகிறது. ஈழம், போர் போன்றவை காணக்கிடக்கிறது. புலம்பெயர் வாழக்கைபற்றிய அலுப்புத்தனம் தெரிகிறது.

நான் தேடுவது ஆழமும், எதிர்காலக் கனவும். அவை எங்கே?

அடுத்ததாக புலம்பெயர்ந்த முதலாவது தலைமுறைகளுக்கு இங்கே விடயங்கள் இருக்கலாம் வெற்றிலை பாக்குப்போலச் சப்பிக்கொள்ள. ஆனால், இவர்களின் பிள்ளைகளுக்கான செய்தி என்ன?

# தமிழ் இலக்கிய இளைஞர் பேரவையின் நிகழ்வுகள்

## 18-01-2015இல்


## நடைபெற்ற வன்னி வரலாறும்-பண்பாடும் நூல் அறிமுகவிழா




## 21-03-2015இல்

## நடைபெற்ற நஞ்சுண்டகாடு குணா கவியழகனுடனான கலந்துரையாடல்





தமிழ் இலக்கிய இளைஞர் பேரவை